# கல்வெட்டு

இதழ் 24 ★ சுக்கில ஆண்டு கார்த்திகைத் திங்கள் ★ விலை ரூ 1-50



அண்மையில், தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறையா பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டத்தில் கண்டுபிடிக்கப்பட்ட கல்வெட்

இம்மாவட்டத்தில் உள்ள திருமலை என்ற ஊரில், இயற்கைக் குகை தளத்தில் காணப்படும் இக்கல்வெட்டு கி.மு. இரண்டாம் நூற்றாண்டை சார்ந்ததாகும். இக்கல்வெட்டைப் பற்றிய விவரங்களைப் பின்புற அட்டையி காண்க.

காலாண்டு இதழ் (1989, நவம்பர்த் திங்கள்)

TAMIL NADU STATE DEPARTMENT OF ARCHAEOLOGY.
LIBRARY.
CC No. ... ... ...
Date ... ... ... ...
MADRAS-28.

உள்ளே......

பக்கம்

1 சென்னி நாயக்கன் குளச் சிற்பங்கள் ... 1
—இரா. முத்து

2 சம்புவராயரின் கோயிற் பணி ... 5
—ஆர். வசந்தகல்யாணி

3 ஓர் எல்லைப்புறச் சிற்றரசு ... 11
—நா. மார்க்சிய காந்தி

4 சம்புவராயர் வரலாறு ... 17
—நடன. காசிநாதன்

5 சம்புவராயர் மாவட்டத்தில் ஓர் அரசியல் புரட்சி ... 27
—ச. செங்கல்வராயன்

6 CHIEFTAINS OF MALADU ... 33
—Dr. K. V. Raman

# சென்னி நாயக்கன் குளச் சிற்பங்கள்

இரா. முத்து, எம்.ஏ.,
தொல்பொருள் அலுவலர்.

## அமைவிடம்

திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டம், செங்கம் வட்டத்தில் சென்னியன்பேட்டை என்னும் ஊர் உள்ளது. இவ்வூர் திருவண்ணாமலையிலிருந்து சுமார் 40 கி.மீ. தொலைவில் அரூர் செல்லும் சாலையில் உள்ளது. வரலாற்றுச் சிறப்பு மிக்க சிற்ப வேலைப்பாடுகளுடன் கூடிய குளம் ஒன்று இங்குள்ளது. இக்குளத்திற்குச் "சென்னிய நாயக்கன் குளம்" என்று பெயர்.

## குளத்தின் அமைப்பு

பொதுவாக மக்கள் வாழ்விடங்களில் தண்ணீர் வசதிக்காக நீர்நிலைகள் இருக்கவேண்டியது தேவையான ஒன்று. அவற்றை அமைத்துத் தருவது அரசின் கடமையாகும். சிந்துவெளிப் பண்பாட்டிலேயே பெரிய குளம் இருந்தது என்பது அங்கு நடந்த அகழாய்வுகளின் மூலம் வெளிப்பட்டுள்ளது. அரசர்கள் "குளம் தொட்டு வளம் பெருக்குவதைக்" கடமையாகக் கொண்டு பணிகள் மேற்கொண்டதை பண்டைய இலக்கியங்களும், கல்வெட்டுகளும் காட்டி நிற்கின்றன. நீர்நிலைகள், பாசனம், குடிநீர், கோயிற் பணி ஆகியவற்றிற்காக முறையே ஊரின் வெளியிலும், நடுவிடங்களிலும், கோயில்களை யொட்டியும் அமைக்கப்படுவதுண்டு. இவற்றுள் எந்த வகையில் அகப்படுத்துவது என்று வினா எழுப்பும் வகையில் அமைந்ததே மேற்காணும் குளமாகும்.

## மாற்பிடுகுப் பெருங்கிணறு

தமிழ்நாட்டில் வரலாற்று சிறப்பு வாய்ந்த கிணறு ஒன்று உண்டு. அது திருச்சி மாவட்டம், திருவெள்ளறையில் 'ஸ்வஸ்திக'

வடிவில் அமைந்திருப்பது ஆகும். இக்கிணறு பல்லவ மன்னன் நந்திவர்மன் (கி.பி. 796-847) காலத்தைச் சார்ந்தது. இதன் பெயர் "மாற்பிடுகுப் பெருங்கிணறு" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. கிணறு வெட்டும் பணி நந்திவர்மனின் நான்காவது ஆட்சியாண்டில் தொடங்கி ஐந்தாவது ஆட்சியாண்டில் முற்றுப்பெற்றது. இதனை வெட்டுவித்தவன் ஆலம்பாக்கத்து விசையநல்லுழான் தம்பி கம்பன் அரையன் என்று கல்வெட்டு குறிப்பிடுகின்றது.

இக்கட்டுரையில் குறிப்பிடப்படும் சென்னிய நாயக்கன் குளம் தனிச் சிறப்பு வாய்ந்தது. இதுபோன்ற அமைதியில் தமிழகத்தில் வேறு எங்கும் குளமிருப்பதாகத் தெரியவில்லை.

## குளத்தின் அமைப்பு

சென்னிய நாயக்கன் குளத்திற்குள் செல்ல நான்கு பக்கமும் படித்துறைகள் உள்ளன. இதனைச் சுற்றிலும் கைப்பிடிச் சுவர்கள் அமைக்கப்பட்டுள்ளன. இக்குளம் சுமார் 14,400 சதுர அடி பரப்பளவு கொண்டது. இதன் உட்பக்கக் கைப்பிடிச் சுவரில் காதல், வீரம் ஆகியவற்றை விளக்கும் சிற்பங்கள் மிகவும் நேர்த்தியாகச் செதுக்கப்பட்டுள்ளன. சிற்ப அமைதியினைக் கொண்டு இக்குளம் கி.பி. 17-ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததாகக் கூறலாம்.

## சிற்பங்களின் காட்சி

பொதுவாகத் தமிழகத்தில் பல்லவமன்னன் மகேந்திரவர்மன் உருவச்சிலை தொடங்கிப் பல்வேறு காலங்களிலும் மன்னர்களின் உருவச்சிலைகளையும், கோயிலுக்குக் கொடையளித்துப் பணிபுரிந்த வர்களின் உருவச் சிலைகளையும் செதுக்கிவைக்கும் மரபு உள்ளது. இதுபோலவே கோயிற் கட்டட அமைதியில் பல்வேறு சிற்ப நூல் களில் வகுத்துள்ளபடி இறைவனுடைய பல்வேறு உருவ அமைதிகளை வணங்கத்தக்க வகையில் அமைப்பதுண்டு. சிதம்பரம் ஆடவல்லான் கோயிலிலும், கும்பகோணம் சாரங்கபாணி கோயிலிலும் ஆடல் கலையின் பல்வேறு கரணங்களைச் சிற்பங்களாகக் காணமுடிகிறது. இச்சிற்பங்களினின்று வேறுபட்டதாய் அமைவன சென்னிய நாயக்கன் குளத்தின் சிற்பங்கள்.

இக்குளத்தில் கைப்பிடிச் சுவரில் 192 புடைப்புச் சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன. அவற்றுள் குறிப்பிடத்தகுந்த காட்சிகள் சில :

அ) கடவுள் வழிபாட்டுச் சிற்பங்கள்

1 விநாயகர் வழிபாடு.
2 சிவலிங்க பூசை வழிபாடு.
3 காளி, லட்சுமி வழிபாடு.
4 கண்ணன் குழல் ஊத, ஆநிரைகள் மயங்கி நிற்கும் காட்சி.

ஆ) மன்னர்கள் பற்றிய சிற்பங்கள்

1 அரசனும் அரசியும் பல்லக்கில் அமர்ந்து அனைத்து இசைக் கருவிகளுடன் உலா வரும் காட்சி.

இ) மிதுனச் சிற்பங்கள்

1 ஆண், பெண் உறவில் பல்விதக் காட்சிகள்.
2 விலங்குகளின் உடல் உறவைக் காட்டும் காட்சிகள்.

ஈ) கேளிக்கைச் சிற்பங்கள்

1 பெண்கள் கோலாட்டம், கும்மி கொட்டுதல், பகடையாடுதல், நடனமாடுதல் போன்ற காட்சிகள் சித்திரிக்கப்பட்டுள்ளன.
2 பாம்பாட்டி மகுடி ஊத நல்லபாம்பு படம் எடுத்து ஆடுவது போன்ற சிற்பம் அழகுபட வடிக்கப்பட்டுள்ளது.

உ) வீரத்தை வெளிப்படுத்தும் காட்சிகள்

1 வேல், துப்பாக்கி இவற்றைக் கொண்டு விலங்குகளை வேட்டையாடுதல்; சிலம்பாட்டம் ஆகிய காட்சிகளும் நேர்த்தியாகச் சித்திரிக்கப்பட்டுள்ளன.

ஊ) போர்க் காட்சிகள்

யானைப்படை, குதிரைப்படை, காலாட்படை, விற்போர், மற்போர் போன்றவற்றை விளக்கும் அற்புதமான சிற்பங்கள் வடிக்கப்பட்டுள்ளன.

மேலும் மயில் ஆடுவது போன்றும், வாத்து, அன்னம் நீரில் நீந்தும் காட்சிகளும், பாம்பு, நண்டு, தவளை போன்றனவும் செதுக்கப்பட்டுள்ளன.

## குளம் வெட்டியதற்கான காரணம்

### செவிவழிச் செய்தி

கண்ணுக்கும் கருத்துக்கும் விருந்தாகவுள்ள இச்சிற்பங்களைக் குளத்தில் செதுக்கப்பட்டதின் நோக்கத்தினை நாம் செவிவழிச் செய்தியாகத்தான் அறியமுடிகிறது. இதனைத் தவிர வேறு ஆதாரங்கள் ஏதுமில்லை.

சென்னிய நாயக்கன் என்ற மன்னன் தம் மகளுக்கு மணம் செய்து வைத்தான். ஆனால், இளவரசி இல்லறத்தில் ஈடுபாடு கொள்ளாது அரசன் வீட்டிற்கே வந்துவிட்டாள். இளவரசிக்கு இல்லறத்தில் ஈடுபாடு ஏற்படும் வகையில், அவள் தன் தோழியருடன் குளிக்கச் செல்லும் குளத்தில் சிற்றின்ப உணர்வுகளைச் சித்திரிக்கும் பல காட்சிகளைப் புடைப்புச் சிற்பங்களாகச் செதுக்க ஆணையிட்டான். இதனைப் பார்த்து இளவரசிக்கு இல்லற இன்பத்தில் நாட்டம் ஏற்படும் என்ற நம்பிக்கையில் செதுக்கி வைத்ததாகக் கூறுகின்றனர்.

இராமநாதபுரம் சேதுபதி மன்னர்களின் அரண்மனைச் (இராமலிங்க விலாசம்) சுவர்களிலுள்ள ஓவியங்களுடன் இச்சிற்பங்கள் பெரிதும் ஒப்புநோக்கத்தக்கன. அரசர்கள் தம் பொழுது போக்கிற்குச் சேவல் சண்டை, ஏறுதழுவுதல், மற்போர் போன்ற வீர விளையாட்டுகளைக் காண்பதும், தாம் வாழும் அரண்மனை அந்தப்புறப் பகுதிகளில் இதுபோன்ற காட்சிகளைத் தீட்டிவைப்பதும் அன்றைய வழக்கமாக இருந்திருப்பதை மேற்சொன்ன ஓவியங்கள் காட்டுகின்றன. சென்னிய நாயக்கன் குளத்துச் சிற்பங்களும் இராமலிங்க விலாசத்து ஓவியங்களும் சமகாலத்தவையாக இருப்பதும் குறிப்பிடத்தக்க சிறப்பாகும்.

# சம்புவராயரின் கோயிற் பணி

ஆர். வசந்தகல்யாணி,
எம்.ஏ. (தமிழ்), எம்.ஏ. (வரலாறு & தொல்லியல்),
கல்வெட்டாய்வாளர்.

சம்புவராயர்கள் கி.பி. 12, 13-ஆம் நூற்றாண்டுகளில் சோழப் பேரரசுக்கு அடங்கியவர்களாக வடவார்க்காடு, தென்னார்க்காடு, செங்கற்பட்டு மாவட்டப் பகுதிகளில் அதிகாரிகளாக இருந்தனர். அவ்வப்போது போர்களில் பங்கு கொண்டு அவர்களுக்கு உதவியும் புரிந்தனர். பின்னர் கி.பி. 14-ஆம் நூற்றாண்டில் இச்சம்புவராயர்கள் பாண்டியரின் பேராதிக்கத்தை ஒப்புக்கொண்டு அவர்களின்கீழ் ஆட்சி செலுத்தினர். இதனையடுத்து இசுலாமியப் படையெடுப்பில் பாண்டியரின் வலிமை குன்றவே, காலங்கருதிக் காத்திருந்த சம்புவராயர்கள் தங்கள் தனியாட்சியை நிறுவினர். பின்னர் மீண்டும் இசுலாமியர்களுக்கு அஞ்சி விசயநகர மன்னர்களுக்குத் தங்கள் ஒத்துழைப்பை நல்கினர். இது இவர்களைப் பற்றிய சிறு முன்னுரை. இந்த நான்கு காலகட்டங்களிலும் இவர்கள் பேரரசர்களுக்கு உதவி புரிந்ததோடு சமுதாயத்திற்கும் தொண்டாற்றியுள்ளனர். தமிழ்ப் பண்பாட்டின் இருப்பிடமான கோயில்களுக்கு ஏராளமான தானங்களையும் அளித்துள்ளனர். சதுர்வேதிமங்கலங்களை ஏற்படுத்துதல், கோயில்கள் கட்டுதல், கோயில்களுக்குக் கொடை அளித்தல் என்று இவர்களுடைய பணி சிறந்து நின்றமைக்கு ஏராளமான கல்வெட்டுகள் சான்றாக உள்ளன.

சம்புவராயர்கள் சைவத்தைப் பின்பற்றி ஆதரித்தனர் என்பது அவர்கள் பெயராலேயே விளங்கும். சம்பு-சிவன்; இதை அடைமொழியாக்கிச் சம்புகுலம் என்று கூறிக்கொண்டதோடு சிவனுடைய வாகனமாகிய காளையைத் தங்கள் சின்னமாகவும் வைத்துக்கொண்டனர்.

சம்புவராயர்களின் கோயிற் பணிகளை நான்கு நிலைகளில் பார்க்கலாம். (i) சிற்சில பகுதிகளுக்கு அதிகாரிகளாக இருந்தபோது தங்கள் வரம்புக்கு உட்பட்டிருந்த வரிகளையும் நிலங்களையும் தானமாக அளித்தல். (ii) தாங்களே கோயில்கள், கோபுரங்கள் எடுத்து நிவந்தங்கள் அளித்தல். (iii) தாங்கள் அடைந்த வெற்றியின்

நினைவாக இறைவனுக்கு நன்றி செலுத்து முகத்தான் தங்கள் பெயரால் இறைவனுக்குப் பூசைகளுக்கு ஏற்பாடு செய்தல். (iv) இசுலாமியப் படையெடுப்பின் விளைவாக ஏற்பட்ட பெருஞ் சேதங்களினால் அழிந்துபட்ட கோயில்களை மீண்டும் புதுப்பித்து அவற்றுக்குத் தானங்கள் அளித்தல் என்று இவர்கள் செய்த அறம் பலவாறு காணப்படுகிறது.

இவை தவிர சமயக் காழ்ப்பின்றிச் சம்புவராயர்கள் சமணக் கோயில்களுக்கும் பரவலாகத் தானங்களை அளித்துள்ளனர். இனி இந்த வரிசையில் அவர்கள் செய்த சமயப் பணிகளைக் காண்போம்.

(i) சீயமங்கலம் தூணாண்டார் கோயிலில் உள்ள விக்கிரம சோழன் கல்வெட்டு செங்கேணி நாலாயிரவன் அம்மை அப்பனான இராசேந்திரசோழ சம்புவராயன் இக்கோயிலுக்குச் சில வரிகளைத் தானமாக அளித்துள்ளதைத் தெரிவிக்கிறது.[1] இவனே வாயலூரில் கோயில்கள் எழுப்பியும், குளம் வெட்டியும் தொண்டு புரிந்துள்ளான்.

வழுவூர் பிரம்மபுரீச்வரர் கோயிற் கல்வெட்டில் செங்கேணி வீரராக்கத சம்புவராயன் மூன்றாம் குலோத்துங்கனின் 17-ஆம் ஆட்சியாண்டில் புரவரிநல்லூர் என்ற கிராமத்தின் வருவாயை வழிபாட்டிற்காகவும், திருப்பணிக்காகவும் அளித்துள்ளான்.[2] அதே கோயிலுக்குச் செங்கேணி வீரப்பெருமாளான குலோத்துங்க சம்புவ ராயன் 23 பசுக்களையும் காளையையும் தானமாக அளித்தான். இலம்பையங்கோட்டூருடைய நாயனார் கோயிலுக்குச் செங்கேணி அம்மையப்பன் வன்னிய நாயன் சம்புவராயன் நிலங்களை அளித் துள்ளான்.[3] செங்கேணி மிண்டன் அத்திமல்லன் சம்புவராயன் திரிசூலக் காசு மற்றும் குற்ற தண்டம் போன்றவற்றைக் கோயிலுக்கு அளித்துள்ளான்.[4]

வீராசனி அம்மை அப்பன் அழகிய சோழனான எதிரிலி சோழ சம்புவராயன் இரண்டு நொந்தா விளக்கு எரிக்கவும், அழகிய சோழன் சந்திக்கும், தைமாதத் திருவிழாவிற்கும் அழகியசோழநல்லூரான வாலிகண்டகிராமம் என்ற கிராமத்தை அளித்த செய்தியை வாணியம் பாடியிலுள்ள மூன்றாம் இராசராசன் கல்வெட்டுக் குறிக்கிறது.[5] இதுபோன்று திருவண்ணாமலையில் வீரசோழன் அத்திமல்லன் சம்புவராயனான எதிரிலி சோழச் சம்புவராயன், செங்கேணி அம்மை யப்பன் கண்ணுடைப் பெருமாளான விக்ரமசோழச் சம்புவராயன்,

ஆகியோர் விளக்கெரிக்கப் பசு, காளை ஆகியவற்றை அளித்துள்ளதையும் காண்கிறோம். செங்கற்பட்டு மாவட்டம் கலவையிலுள்ள திருக்காளீச்வரர் கோயிற் கல்வெட்டொன்று "மதுராந்தகச் சதுர்வேதி மங்கலத்துத் திருவைச்சிறுபாக்கத்து உடையாராட்சி கொண்ட நாயனாற்கு அத்திமல்லனான குலோத்துங்க சோழச் சம்புவராயன் கல்வெட்டுவிச்சுக் குடுத்த பரிசாவது : தேவதானம் திருவைச்சிறுபாக்கமும், நெற்குன்றமும், இவ்வூர்ப் பிடாகைகளும், புளியுண்ணியும் உள்ளிட்ட ஊர்களில்"[7] வரும் பல வரிகளையும், கடமைகளையும் பூசைக்கும் திருப்பணிகளுக்கும் உடலாக விட்ட செய்தியைக் கூறுகிறது.

ஆர்ப்பாக்கம் கல்வெட்டு சம்புவராயர் சமயத்தின் மீதும் சமய குறவர் மீதும் கொண்ட நம்பிக்கையினையும் பக்தியினையும் வெளிப்படுத்துவதாக உள்ளது. திருவாலீச்வரர் கோயிலில் உள்ள இந்த இரண்டாம் இராசாதிராசனின் ஐந்தாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததாக இருப்பதோடு சமயத்தின் மீது கொண்ட ஆழ்ந்த பற்றையும் நம்பிக்கையையும் காட்டுவதாக உள்ளது. கி.பி. 12-ஆம் நூற்றாண்டில் சிங்களப்படை பாண்டிநாட்டின் மீது படையெடுத்து மதுரையில் ஆட்சியில் இருந்த குலசேகரனை விரட்டிவிட்டு இராஜாதிராஜனுக்குக் கீழ் அடங்கி இருந்த சிற்றரசர்களைத் தாக்குகிறது. இப்போர் தொண்டி, பாசி வரை பரவிச் சோழ நாட்டு மக்களின் மனதைக் கலக்கி அச்சத்தை ஏற்படுத்துகிறது. அப்போது எதிரிலி சோழ சம்புவராயன், சுவாமி தேவரிடம் சென்று வழிபாடு, யாகம், அர்ச்சனை ஆகியவற்றின் மூலம் இந்த அழிவைத் தவிர்க்குமாறு வேண்டவும்; அவர் 28 நாட்கள் சிவனுக்குச் சிறப்பு வழிபாடு செய்கிறார். இவ்வழிபாட்டின் எதிரொலியாகச் சிங்களப் படைத் தளபதிகள் சயத்ரதத் தண்டநாயகனும், இலங்காபுரித் தண்டநாயகனும் ஓடிவிட்டனர். இதனால் மிகவும் மகிழ்ந்த சம்புவராயன் ஆர்ப்பாக்கம் என்ற ஊரையே சுவாமி தேவருக்குத் தானமாக அளித்தான்.[8]

சோழருக்குப் பின் பாண்டியர் தலைமையை ஏற்றுக்கொண்ட நிலையிலும் இச்சம்புவராயர்கள் கோயிற் பணியைச் செவ்வனே செய்துவந்துள்ளனர். பிற்காலப் பாண்டியர் காலத்தில் வாழ்ந்த குலசேகர சம்புவராயன், தனியாட்சி செலுத்திய இவன் மகன் வென்று மண்கொண்ட சம்புவராயன், இவனுடைய இரு புதல்வர்களான

இராசநாராயணன் சம்புவராயன் என்ற பட்டப்பெயர் கொண்ட மல்லிநாதன், பொன்னின் தம்பிரான் ஆகியோரும், மல்லிநாத சம்புவ ராயனின் மகன் மூன்றாம் இராசநாராயணனான திருநீற்றுச் சம்பன் ஆகியோரும் ஏராளமான கோயிற் பணிகளைச் செய்துள்ளனர்.

அந்தளில் வென்றான் என்ற சிறப்புப் பெயர் பெற்ற குலசேகரச் சம்புவராயன் அந்தளில் வென்றான் திருநாள் என்று தன் பெயரால் கோயிலில் திருவிழாவிற்கு ஏற்பாடு செய்தான். அதுபோலவே செய்யாற்று வென்றான் சந்தி[9] என்ற தன் பெயரிலும் வழிபாட்டு நிவந்தம் நிறுவியதை அறிகிறோம்.

திருவோத்தூர், ஆர்ப்பாக்கம், மாரங்கியூர், உக்கல், திருப்புலி வனம், திருவாமாத்தூர், காஞ்சிபுரம், திருக்கழுக்குன்றம், செவ்வல்லி மேடு, திருவானக்கோயில் போன்ற ஊர்களில் கிடைக்கும் கல்வெட்டு களால் இவர்களுடைய கோயிற் திருப்பணிகளை விரிவாகவே அறிய இயலுகிறது.

(ii) கோயில்களையும், திருமண்டபங்களையும் எடுத்து, வழி பாட்டிற்கு நிவந்தங்கள் அளித்துள்ளனர். இரண்டாம் இராசாதி ராசனின் "யாண்டு ஏழாவது திருவக்கரை ஆளுடையார் கோயிலில் இத்திருக் கோபுரங் கண்டர் சூரியன் திருக்கோபுரமென்னும் பெயரால் செய்வித்தான் அம்மை அப்பன் பாண்டிநாடு கொண் டானான கண்டர் சூரியன் சம்புவராயன்".[10] "இராசராச வள நாட்டு மாத்தூர் நாட்டு உடையார் திருவக்கரை ஆளுடையார் கோயிலில் இத்திருமண்டபம் கண்டர் சூரியன் திருமண்டபம் என்னும் பெயரால் செய்வித்தான் அம்மை அப்பன் பாண்டிய நாடு கொண்டானான கண்டர் சூரியன் சம்புவராயன்".[11] இவன் இத்திரு மண்டபத்தை மூன்றாம் குலோத்துங்கன் காலத்தில் எடுத்தான். இக்கோயிலில் இவனே "செய்வித்து இட்ட ஐஞ்சு நிலைக்குத்தி விளக்கு" பற்றியும் கூறப்பட்டுள்ளது. படைவீடு என்ற ஊரிலுள்ள அம்மையப்பேச்வரம் என்ற கோயில் மேலே கூறிய அம்மையப்பன் கண்டர் சூரியன் பெயரால் எடுக்கப்பட்டிருக்கலாம். இராசகம்பீர சம்புவராயன் இக்கோயிலுக்குத் தானங்கள் அளித்துள்ளான்.[12] சீயமங்கலம் தூணாண்டார் கோயிலில் குலோத்துங்க சோழச் சம்புவராயன் மாளிகை ஒன்றை எடுத்தான், மேலும் நிலங்களைத் தானமாகவும் அளித்துள்ளான்.[13]

(iii) இசுலாமியப் படையெடுப்பிற்கு அஞ்சி விசயநகர மன்னர்களின் மேலாண்மையை ஒப்புக்கொண்டு ஆட்சி புரிந்த நிலையில் அவர்களின் ஒத்துழைப்போடு இசுலாமியரால் இடித்தும் கொள்ளையடிக்கப்பட்டும் பாழாயின கோயில்கள் பலவற்றைப் புதுப்பித்து மீண்டும் வழக்கமான வழிபாடுகளுக்கு நிவந்தங்கள் அளித்தனர். திருவானைக்கோயிலில் உள்ள இராசநாராயண சம்புவராயன் கல்வெட்டு 'துருக்கர் படையெடுப்பினால்' தேவதான நிலங்கள் கோயில் உரிமையிலிருந்து நீங்கி, கோயிலும் வழிபாடற்றுக் கிடந்ததைத் தெரிவிக்கிறது. இராசநாராயணன் அவற்றைச் சரிசெய்து மூன்று வேலி நிலத்தையும் தானமாக அளித்து வழிபாடு சரிவர நடைபெற ஏற்பாடு செய்தான் என்ற செய்தி கூறப்பட்டுள்ளது.[14] திருவொற்றியூர் ஆதிபுரீச்வரர் கோயில் கல்வெட்டு இரண்டு வகையில் முக்கியத்துவம் வாய்ந்தது. பக்தியையும் நிர்வாகத் திறனையும் அது வெளிப்படுத்துகிறது. இசுலாமியர்களின் கொள்ளையடிப்பிற்குப் பயந்து நிலத்திற்கடியில் புதைக்கப்பட்ட கோயிற் சொத்துக்களை நியாயமற்ற முறையில் அனுபவித்து வந்ததால் அவ்வாறு அனுபவித்து வந்தவர்களின் நிலங்களும் வீட்டு மனைகளும் பறிக்கப்பட்டுக் கோயிலுக்குக் கொடுக்கப்பட்டன[15] என்பது ஒரு கல்வெட்டால் அறியப்படுகிறது. மேலும் கோயில் இசபத்தளியார், தேவரடியார், பதியிலார் ஆகியோருக்குள் ஏற்பட்ட பூசல்களைத் தவிர்த்து வழக்கம் போல் வழிபாடுகள் நடக்க ஏற்பாடு செய்யப்பட்டது.[16] திருவாமாத்தூர்க் கல்வெட்டிலும் "........முன்னாள் துருக்கர் வந்து திருவாசல்களும் நிரையல் குலைந்து தேசமும் அழிந்து கிடக்கையிற் சகலலொக சக்ரவர்த்தி வென்று மண்கொண்ட சம்புவராயர்க்கு யாண்டு பதினாலாவது" பூசை திருவிழாக்கள் முன் நடந்தபடி நடக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது[17] என்று கூறப்படுகிறது.

இவ்வாறு சைவக் கோயில்களுக்குப் பலவகையில் நிவந்தங்கள், நிலங்கள் அளித்த சம்புவராயர்கள் பொதுவாக மற்ற மன்னர்களைப் போலவே பிற மதங்களையும் மதித்துப் போற்றினர். சமயக் காழ்ப்பின்றி அக்கோயில்களுக்கும் தானங்களை அளித்தனர். பெருமாண்டூரில் இரவிகுலசுந்தரிப் பெரும்பள்ளியில் "இராசராசச் சம்புவராயனான கண்டர்சூரியனுக்கு முன்வேளை கொண்ட மங்கையர் நாயகியாற்கு நன்றாக ஸ்ரீ கோயிலெடுத்து" அங்கு

மங்கையர் நாயகி வரசுந்தரியார் என்ற இயக்கியை எழுந்தருளுவித்து அவிப்பலி அர்ச்சனை ஆகியவற்றுக்குக் கண்டர் சூரியன் நிலத்தைத் தானமாக[18] அளித்த செய்தியையும் அறிகிறோம்.

பெருமாண்டூர் சந்திரநாதர் கோயிலில் இயக்கி வழிபாட்டிற்காக இராசநாராயண சம்புவராயன் நிலம் அளித்த செய்தியை ஒரு கல்வெட்டு தெரிவிக்கிறது.[19]

மேற்கூறிய சிற்சில சான்றுகளால் பேரரசுக்கு அடங்கியிருந்த போதிலும் அவர்களோடு போட்டியிடும் வண்ணம் கோயிற்பணிகள் செய்து சிறந்துள்ளனர் சம்புவராயர் என்பது உறுதி.

*Reference :*


1 A Topographical List of the Inscriptions of the Madras Presidency. Vol. I No. 699 (North Arcot)

2 Ibid No. 717, 718.

3 Ibid No. 380.

4 Ibid No. 341.

5 A.R.E. 1963-64 No. 182.

6 S.I.I. Vol. VIII No. 142, 144.

7 Ibid. Vol. VII No. 454.

8 Ibid. Vol. VI No. 456.

9 A.R.E. 180/1940; A.R.E. 72/1918.

10 S.I.I. Vol. XVII No. 217.

11 Ibid. No. 215.

12 A Topographical List of Inscriptions. Vol. I No. 377.

13 Ibid, No. 697.

14 Ibid. No. 565.

15 Ibid. No. 1072.

16 Ibid. No. 1081.

17 S.I I. Vol. VIII No. 750.

18 Ibid. Vol. VII No. 846.

19 A Topographical List of Inscriptions. Vol. I No. 414.


———

# ஓர் எல்லைப்புறச் சிற்றரசு

நா. மார்க்சிய காந்தி,
எம்.ஏ. (தமிழ்), எம்.ஏ. (வரலாறு), டி.இ.எ.
கல்வெட்டாய்வாளர்.

தற்போது சம்புவராயர் மாவட்டம் என்று வழங்கப்பெறும் பகுதி தமிழகத்தின் எல்லைப் பகுதியாகும். பொதுவாக எல்லைப் புறங்களுக்கெனத் தனித்தன்மை உண்டு. அங்கு நிலையான ஆட்சியும், வளமான வாழ்க்கையும் அமைவது மிகவும் கடினம். பேரரசுகளும், தனியரசுகளும், வளமான ஆற்றங்கரைப் பகுதிகளில் அமைந்துவிடும். எல்லைப்பகுதிகள் காடுகளும், மலைகளும் நிறைந்ததாய், மிகுந்த உழைப்பிற்குப் பின்னரும், புன்செய் பயிர்களையே விளைக்கும் நிலையுடையதாய் அமைந்துவிடும்.

இந்த இயற்கையான நில அமைப்பின் காரணமாக, அந்த மக்களுக்கும் தனித்தன்மைகள் சிலவுண்டு. கடின உழைப்புக்குத் தயாராக அம்மக்கள் இருப்பர். தலைநகரில் இருந்து நீண்ட தொலைவில் இருப்பதால் அரசனின் நேரடியான பார்வையும் அங்கு வ்ந்து சேருவதில்லை. அதற்காக அந்தப் பகுதிகளை அரசு மறந்து விடுவதில்லை. அவைதான் நாட்டின் காவலாக - அரணாக நிற்கும் பகுதிகள். வீரமிக்க போர்மறவர்களின் பொறுப்பில் அப்பகுதிகள் விடப்படும். மன்னர் வலிமையுடையவராய் இருக்கையில் அடங்கி இருக்கும் அவர்கள் அவன் வலி குன்றிய நிலை வருமாயின், தனியாக இயங்கவும் தயங்குவதில்லை. மேலும், எல்லையின் மறுபுறம் உள்ள அரசர்கள் பட்டையெடுத்து வருவார்களாயின் முதலில் தாக்கப்படுபவர் களும் அவர்களே. எனவே அப்பகுதியில் ஆட்சி மாறிமாறி அமையும். எல்லைப்பகுதி வீரர்களும், தலைவர்களும் காலத்திற்கேற்ப மாறி மாறி வெற்றி பெற்ற அரசர்களின்கீழ் இயங்கவேண்டிய சூழ்நிலையும் அவர்கட்குத் தவிர்க்க இயலாதது. இத்தகைய வரலாற்றுப் பின்னணி யில்தான் இப்பகுதியின் கல்வெட்டுக்களை நாம் ஆராய்தல்வேண்டும்.

தமிழகத்திலேயே அதிகமான சிற்றரசர்கள், மற்றும் தலைவர்களின் கல்வெட்டுக்கள் இங்குதான் கிடைக்கின்றன. சங்ககாலத்தில் நன்னன், அதியமான், பாணர், மலையமான், கட்டி, கொங்கர் ஆகிய குடியினர் தலைமைப் பதவி உடையவர்களாக இப்பகுதிகளில் விளங்கியிருக்கின்றனர். பின்வந்த பல்லவர் காலத்தில், வேட்டுவதியரையர், காடக அதியரையர், பாணதிராயர், கொங்கரையர், கங்கரையர் ஆகியோர் கல்வெட்டுக்கள் இப்பகுதிகளில் கிடைக்கின்றன.

பல்லவ அரசர்களின் மற்றொரு பிரிவான காடக அதியரையரான காடுவெட்டிகளே இப்பகுதியில் காணப்படும் பல்லவர் கல்வெட்டுக்களுக்கு உரியவர்கள் என்ற கருத்தும் உண்டு.[1] எனவே பல்லவர்களுக்குக் கீழ், மேற்குறிப்பிட்ட சிற்றரசர்கள் எல்லாம் இப்பகுதியில் மேலாண்மை செய்திருக்கின்றனர்.

பல்லவர் வலி குன்றி, சோழர்கள் தலையெடுக்கு முன்னர், தமிழகத்தின் வட எல்லையில் ஆட்சிபுரிந்த கங்கர், பாணர், நுளம்பர் ஆகியோர் தம் வலிமையினைக் காட்டித் தலைவர்களாக விளங்கியிருக்கின்றனர். இக்காலத்தில் வடக்கிலிருந்து படையெடுத்துவந்து தமிழகத்திலும் வெற்றிக் கொடி நாட்டிய இராட்டிரகூட மூன்றாம் கிருட்டிணனின் கல்வெட்டுக்கள் அவனாதிக்கத்தை அடையாளம் காட்டுகின்றன. தென்னார்க்காடு மாவட்டம் கீழையூரில் மூன்றாம் கிருட்டிணனின் கல்வெட்டுக்களில், வைதும்ப விக்கிரமாதித்தன், வைதும்ப மகாராசன் திருவையன், வைதும்ப மகாராசன் ஸ்ரீகண்டன் ஆகியோர் குறிக்கப்படுகின்றனர்.[2] வடஆர்க்காடு மாவட்டம் திருவல்லத்தில் முதலாம் இராசராசன், முதலாம் இராசேந்திரன் காலம் வரையிலும்கூட அந்த வழியினரான வைதும்ப துக்காரி, வைதும்ப சோமநாதன் சங்கரதேவன் ஆகியோர் குறிக்கப்படுகின்றனர்.[3] வடஆர்க்காடு மாவட்டம், சோளிங்கரில் பராந்தகனின் கல்வெட்டில் கங்க பிரிதிவிபதி குறிக்கப்படுகிறான்.[4] இதே மாவட்டம் வேலூர்க் கல்வெட்டு மூலம் திரிபுவன வீர நுளம்பன் சிற்றரசனாக இருந்தது தெரிகிறது.[5] வள்ளிமலையில் கங்கராச மல்லன், குடைவரையே எடுத்துள்ளான். பழைய கன்னட, கிரந்தக் கல்வெட்டுக்கள் இக்குடைவரைக் கோயிலில் உள்ளன.[6] இக்கோயிலில் பாணரது கல்வெட்டுக்களும் உள்ளன.[7]

இவர்களுக்குப் பின்னர், சோழர்களில் இரண்டாம் குலோத்துங்கன் காலம் வரை இப்பகுதி தொடர்ந்து சோழராட்சிக்குள் அடங்கி இருந்தது. இரண்டாம் குலோத்துங்கன் ஆட்சியில் சோழர்கள் வலி குன்றினர். அக்காலத்தில்தான் இப்பகுதியில் சம்புவரையர், சேதிராயர், நீலகங்கரையர், வாணாதிராயர், காடவராயர், காலிங்கராயர், வில்லவராயர் போன்ற பல குறுநிலத் தலைவர்கள் கல்வெட்டுக்களில் குறிக்கப்படுகின்றனர். முதற் குலோத்துங்கன் காலம் முதலே இவர்களுள் சிலர் குறிக்கப்படுகின்றனர். இந்தக் காலக்கட்டத்தில், தெற்கே இருந்த பாண்டியர் வலிமைபெறத் தொடங்கினர். காடவராயர் வழிவந்த கோப்பெருஞ்சிங்கன் தென்ஆர்க்காடு பகுதியில் தன்னாட்சி செலுத்தத் தொடங்கினான். தருமபுரி மாவட்டப் பகுதியில் அதியமான் வழிவந்த விடுகாதழகிய பெருமாள் மேலாண்மை செலுத்தினான். ஆறகழூரைத் தலைநகரமாகக் கொண்டு மகதை நாடாழ்வானும், தெலுங்குச் சோழ மன்னர்களில் நெல்லூர்ச் சோழன் விசயகண்ட கோபாலன், வீரகண்ட கோபாலன் போன்றோரும், பாண்டியர் வேண்டுகோளுக்கிணங்கி வந்த காகதீய மன்னன் கணபதியும், தமிழகத்தில் தத்தம் கல்வெட்டுக்களை இக்காலக்கட்டத்தில் பொறித்துள்ளனர். இவர்களுக்கு நடுவேதான் செங்கேணி குலத்தைச் சேர்ந்தவர்களாகவும், சம்புகுலத்தவர்களாகவும் தம்மைக் கூறிக்கொண்ட சம்புவராயர்களும் மேலாண்மை செலுத்த முயன்று வெற்றியும் பெற்றுள்ளனர்.

**சம்புவராயர் வளர்ச்சி:** விக்ரம சோழன் காலத்தில்தான் இந்த குலத்தைச் சேர்ந்த பெயர் முதன்முதலாகக் காணப்படுகிறது. மூன்றாம் ஆட்சியாண்டில் செங்கேணி அம்மையப்பன் பாண்டியானை நரலோக வீரப் பேரரையனும், ஐந்தாம் ஆட்சியாண்டில் அம்மையப்பன் சம்புவரையனும், 16-ஆம் ஆட்சியாண்டில் செங்கேணி நாலாயிரவன் அம்மையப்பன் ஆன ராசேந்திர சோழச் சம்புவரையனும் குறிக்கப்படுகின்றனர். இப்பெயர்கள் எல்லாம் ஒருவரையே குறித்ததாக எடுத்துக்கொள்ள இயலாது. எனவே இக்காலத்தில் 'செங்கேணி' என்ற அடையினை ஏற்ற இக்குலத்தைச் சேர்ந்த பலர் இருந்திருக்கின்றனர். இதற்குப் பின்னர் இரண்டாம் இராசாதிராசன் காலத்தில்தான் இவர்களைப்பற்றிய குறிப்பிடத்தக்க வரலாற்று நிகழ்ச்சி நடைபெற்றது. அதுவே இம்மரபினர் வரலாற்றில் சிறந்த ஓரிடத்தைப் பெறுவதற்கும் ஏதுவாகியது எனலாம். அது

ஈழப்படை சோழர் மீது படையெடுத்த நிகழ்ச்சி ஆகும். ''ஈழப்படை பாண்டி மண்டலத்தைக் கைக்கொண்டு மதுரையிலேயிருந்த ராஜா குலசேகரனைப் போகத் துரத்திப் பின்பு மகாராஜா ஸ்ரீராஜாதிராஜ தேவர் சாமந்தரோடே பூசல் பொரத் துடங்கி தொண்டி பாசி பிரதேசத்திலே பூசலுண்டாய் அபாயத்திலே ஈழப்படை ஜயித்த வாறே சொழமண்டலத்திலும் மற்றுமுள்ள னாட்டுக்களிலு முள்ள ஜநங்களெல்லாம் பயப்பட்டமையைக் கேட்டு எதிரிலி சோழச் சம்புவரையர் ஆர்ப்பாக்கத்தில் உள்ள சாமிதேவரை அணுகி, ஈழப்படையாகிறது சாலப் பாப கர்மாக்கள்; அவர்கள் சோழ மண்டலத் தெல்லையிலே புகுதில் ஸ்ரீமகாதேவர் கோயிலுள்ளிட்ட தேவர்கள் கோயிலுக்கும் பிராம்மணர்க்கும், ராஷ்டிரத்துக்கும் அடங்க விரோதமுண்டாமிதுக்குப் பரிகாரமாக ஜபஹோம அர்ச்சனங் களால் எல்லாப்படியாலும் அபூஷ்டிரமதம் பண்ணியருள வேண்டு மென்று விண்ணப்பஞ் செய்தார். அவரும், ஈழப்படை பூசலிலே அறப்பட்டு, துரப்புண்டு போம்படிக்கு அத்ருஷ்ட முகத்தாலே வேண்டும் யத்நம் பண்ணுகிறோம் என்றருளிச் செய்து இருபத்தெட்டு நாள் அகோர பூஜை பண்ணியருளினார்''. அதன் பின்னர் ஜயத்ரதத் தண்டநாயக்கனும், லங்காபுரி தண்டநாயக்கனும் உள்ளிட்ட பிரதானிகளும் படையும் மடங்கப்பட்டு ஓடிப்போனார்கள் என்ற செய்தி வந்தது. அதற்குக் கைம்மாறாக சாமிதேவருக்கு, எதிரிலி சோழச் சம்புவரையர் ஆர்ப்பாக்கம் என்ற ஊரைத் தானமாக அளித்ததை ஆர்ப்பாக்கத்தில் உள்ள இரண்டாம் இராசாதிராசனின் கல்வெட்டு குறிப்பிடுகிறது. இந்நிகழ்ச்சி, சோழ அரசர்கள் சம்புவராயர் குலத்தினரிடம் சிறந்த அன்பு கொள்ளவும், அரசியலில் சிறப்பிடம் தரவும் ஒரு காரணமாக அமைந்திருத்தல் வேண்டும். இதனை இந்நிகழ்ச்சிக்குப்பின் எழுதப்பட்ட கல்வெட்டுக்கள் தெளிவாக்குகின்றன. இது நிகழ்ந்தது இரண்டாம் இராசாதி ராசனின் ஐந்தாம் ஆட்சியாண்டில் ஆகும் (கி.பி. 1171). இந் நிகழ்ச்சிக்குப் பின்னர் ஏழாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டில், சம்பு வரையர் குலத்துக் கண்டர் சூரியன், 'பாண்டிநாடு கொண்டான்' என்ற சிறப்புப் பெயருடன் குறிக்கப்படுகிறான். 13-ஆம் ஆட்சி யாண்டில் குறிக்கப்படும் செங்கேணி அம்மையப்பன் பாண்டிய ராசராச சம்புவராயன், தன் பாட்டனார் 'அம்மையப்பன் குலமாணிக்கம் பாண்டிநாடு கொண்டார்' என்பதைச் சிறப்பாகக் குறிப்பிடுகிறான்.

இரண்டாம் இராசாதிராசனுக்குப் பின் மூன்றாம் குலோத்துங்கன், மூன்றாம் இராசராசன் கல்வெட்டுக்களில்தான் சம்புவராயர்கள் அதிக அளவில் குறிக்கப்படுகின்றனர். மூன்றாம் குலோத்துங்கன் காலத்தில் குறிக்கப்படுவோருள் சிலரும் 'பாண்டி நாடு கொண்டான்' என்ற சிறப்புப் பட்டத்தினைக் கூறிக்கொண்டது குறிப்பிடத்தக்கது. மேலும், இவன் காலத்திய சம்புவராயர்கள் பலர், ஓர் ஊரையோ, அல்லது ஊர்களில் இருந்து வசூலிக்கும் வரிகள் முழுவதையுமோ தானமாக அளித்துள்ளனர். பாடிகாவற் பணி இவர்களுக்கு அளிக்கப் பட்டிருந்ததைச் சில கல்வெட்டுக்கள் காட்டுகின்றன. எனவே இக் குலத்தினர் ஊர்த்தலைவர்கள் அளவிற்கு உயர்ந்ததை இவன் காலக் கல்வெட்டுக்கள் காட்டும்.

மூன்றாம் இராசராசன் காலக் கல்வெட்டுக்களில், பலர் தனியாக சோழ அரசனுக்குக் கீழ் இல்லாமலும் கல்வெட்டுக்கள் பொறித் திருப்பதைக் காண்கிறோம். இவன் காலக் கல்வெட்டுக்களில் பல சக ஆண்டைக் குறிக்கின்றன என்பதும் நினைவிற் கொள்ளத்தக்கது. எனவே இவன் காலத்திலேயே சோழப் பேரரசுக்குப் பணியத் தேவையற்ற நிலை வந்துவிட்டது எனலாம்.

இந்நிலையில், நெல்லூரைத் தலைநகராகக் கொண்டு ஆண்ட சோடதிக்கன் ஆன விசயகண்ட கோபாலனின் 3, 8, 18-ஆம் ஆட்சி யாண்டுக் கல்வெட்டுக்களிலும் இவர்கள் குறிக்கப்படுகின்றனர். எட்டாம் ஆட்சியாண்டைச் சேர்ந்த அத்தியில் உள்ள கல்வெட்டு, பிள்ளையார் இராசராச சம்புவரையரைக் குறிக்கின்றது. எனவே சம்புவரையர்கள் அவர்களுடன் நட்புக் கொண்டிருந்திருக்கின்றனர் என்பது தெளிவாகிறது.

பின்னர் பாண்டியராட்சி வருவதற்கு முன்னரே இப்பகுதியில் சம்புவராயர் தனியாக ஆணை செலுத்தத் தொடங்கியிருத்தல் வேண்டும். காஞ்சி, திருவல்லம் கல்வெட்டுக்களுக்குரிய மன்னனான சோழபூபனின் மகன் வீரசம்பனே முதன்முதலில் தனியாணை செலுத்தியிருந்ததாகத் தெரிகிறது. சகம் 1236 (கி.பி. 1314)-ஐச் சேர்ந்த கல்வெட்டுக்கள் இவை. இவன் தன்னைச் 'சோழ பூபன்' மகன் என்றும், 'வீரசோழனி'ன் மகன் என்றும் கூறிக்கொள்கிறான்.

இருப்பினும் கி.பி. *1311*-இல் மாலிக்காபூரும், *1319*-இல் குஸ்ரு கானும் தமிழகத்திற்கு வந்து கொள்ளையடித்துச் சென்றனர். கேரள வீரபாண்டியனின் படையெடுப்பு கி.பி. *1313*-இல் தமிழகத்தில் நிகழ்ந்தது. பாண்டியர்கள் பக்கம் நின்று செய்யாறு, அண்டில் ஆகிய இடங்களில் வெற்றி பெற்றனர் சம்புவராயர்கள். எனினும், இசுலாமியர் கி.பி. *1371* வரை மதுரையில் தங்கிவிட்டதால், பாண்டியரால் தமிழகத்தின் வடக்குப் பகுதியை சரியாகக் கட்டுக்குள் வைத்திருக்க இயலவில்லை போலும்! இந்நிலையில்தான் சம்புவரையர்களின் வென்று மண்கொண்ட சம்புவராயன் தொடங்கி தனியாண்மைகள் தொடர்ந்து கிடைக்கின்றன. *1322* முதல் *1375* வரை நான்கு பேர் இப்பரம்பரையினைச் சேர்ந்தோரின் கல்வெட்டுக்கள் கிடைக்கின்றன. பின்னர் விசயநகர ஆட்சியில் மீண்டும் அவர்களுக்கு அடங்கியே இருந்திருக்கின்றனர்.

எனவே சம்புவராயரின் வரலாறு இவ்வெல்லைப்புறப் பகுதியின் பொதுவான வரலாற்றில் இருந்து பிரிக்க முடியாதது; இப்பகுதியின் வரலாறே, சம்புவராயரின் வரலாற்றைத் துல்லியமாக அறிந்து கொள்ள அடிப்படை ஆகிறது. எல்லைப்புறச் சிற்றரசுகளின் வரலாற்றினின்று சிறிதும் மாறுபடாது ஓர் ஐம்பதாண்டுத் தனி வரலாற்றைப் பெற்ற சிறப்புக்கும் உரியதாகத் திகழ்கிறது.

*Reference*


1 K. Ramamurti, 'Srinidhi', Kadavas.

2 A.R.E. 235 of 1902; 267, 268 of 1902.

3 A.R.E. 11 of 1890; 14 of 1890.

4 A.R.E. 9 of 1896.

5 A.R.E. 10 of 1887.

6 A.R.E. 91 of 1889; 6, 8, 9 of 1895.

7 A.R.E. 7 of 1895.

# சம்புவராயர் வரலாறு

**நடன. காசிநாதன்,**
இயக்குநர்,

சோழர்களது ஆட்சியின்போது முதன்முதலில் விக்ரமசோழன் காலத்தில், ஒய்மாநாட்டுப் பகுதியில் முஞ்ஞூறு என்னும் ஊரைச் சார்ந்த குடிப்பள்ளி என்ற இனத்தைச் சார்ந்த செங்கேணி அம்மையப்பன் பாண்டியான நரலோக விழுப்பரையன் திருவக்கரை உடையார்க்கு நிலக்கொடை அளித்திருப்பதைக் காணமுடிகிறது. இவன் காலத்திலிருந்துதான் செங்கேணி சம்புவராயர் குலம் தலை தூக்கத் தொடங்கியிருக்கிறது என்று கருதலாம். இரண்டாம் இராசாதிராசனின் கல்வெட்டிலும், இதே ஊரைச் சார்ந்த செங்கேணி மிண்டன் சீய(ன் அம்மை) அப்பர் சம்புவராயன் என்பான் குறிக்கப்படுகிறான்.

தொடக்க காலத்தில், இவர்கள் குடிப்பள்ளி இனத்தைச் சார்ந்தவர்கள் என்று தங்களைக் கூறிக்கொள்வதால் இவர்கள் பள்ளி என்ற இனத்தின் வழி வந்தவர்கள் என்பதை உணர முடிகிறது. இப்பள்ளிகள் முதலில் மலைப்பகுதியில் வில் தொழில் புரிந்து வந்தவர்கள் என்பதும், நாளடைவில் நிலப்பகுதிக்கு வந்து நிலவுடைமையாளர்களாக வாழ்ந்திருக்கிறார்கள் என்பதும், 'பள்ளி நாட்டார்' என்றும் 'பன்னாட்டார்' என்றும் பின்னாளில் தங்களை அழைத்துக்கொண்டார்கள் என்பது மற்றொரு கல்வெட்டால் அறியமுடிகிறது. நில உடைமையாளர்களாக மாறிய பிறகு தங்களைக் 'குடிப்பள்ளி' என்று அழைத்துக்கொண்டிருக்கிறார்கள் போலும். அவ்வாறு மாறிய பிறகும் தங்கள் வில் தொழிலையும் விட்டுவிடாது காத்து வந்திருக்கிறார்கள் என்பதைத் தென்னார்க்காடு மாவட்டத்தில் காணப்படும் சில கல்வெட்டுக்கள் புலப்படுத்துகின்றன.

விக்கிரமசோழனின் 16-ஆம் ஆட்சியாண்டில் செங்கேணி நாலாயிரவன் அம்மையப்பன் என்னும் இராசேந்திர சோழச் சம்புவராயன் குறிக்கப்படுகிறான். இவன் வாயலூரில் கோயில்கள்

எழுப்பியும், குளம் வெட்டியும் தொண்டு செய்திருக்கிறான். ஆதலால் இவனுக்கு "நாலாயிரவன் சிவாலய சந்தோழன் செங்கேணி அம்மையப்பன்" என்று ஒரு பட்டப் பெயர் இருந்தமையும் தெரியவருகிறது.

இரண்டாம் குலோத்துங்கன் காலத்திலும் இச்சம்புவராயன் குறிப்பிடப்படுகிறான். மேலும் எதிரிலி சோழச் சம்புவராயன் என்பானும், செங்கேணி மிண்டன் சீயன் அத்திமல்லன் சம்புவராயனும் குறிக்கப்படுகிறார்கள். இரண்டாம் இராசராசன் காலத்தில் செங்கேணி அம்மையப்பன் அத்திமல்லன் என்னும் இராசேந்திர சோழச் சம்புவராயனும், அத்திமல்லன் சீயன் பல்லவாண்டான் என்னும் இராசநாராயணச் சம்புவராயன் என்பவனும், மிண்டன் சீயன் அம்மையப்பன் என்னும் எதிரிலி சோழச் சம்புவராயனும் காணப்படுகின்றனர். இரண்டாம் இராசாதிராசன் காலத்தில் செங்கேணி அத்திமல்லன் என்னும் இராசேந்திர சோழச் சம்புவராயனும், செங்கேணி அம்மையப்பன் சீயன் பல்லவாண்டான் என்னும் இராசநாராயணச் சம்புவராயனும், அம்மையப்பன் பாண்டி நாடு கொண்டான் என்னும் கண்டர்சூரியன் என்னும் சம்புவராயனும், செங்கேணி மிண்டன் சீயன் பல்லவாண்டான் என்னும் சம்புவராயனும், செங்கேணி அம்மையப்பன் எதிரிலி சோழச் சம்புவராயனும் குறிக்கப்படுகின்றனர். மூன்றாம் குலோத்துங்கன் காலத்தில் செங்கேணி மிண்டன் அத்திமல்லன் சம்புவராயனும், பாண்டி (நாடு) கொண்ட அம்மையப்பன் கண்டர் சூரியன் சம்புவராயனும், செங்கேணி அம்மையப்பன் பாண்டி நாடு கொண்டான் கண்டரசூளி என்னும் இராசராச சம்புவராயர் என்பவனும், செங்கேணி அம்மையப்பன் வன்னிய நாயன் சம்புவராயன் என்பவனும், கண்ணுடைப் பெருமாள் என்னும் விக்கிரம சோழச் சம்புவராயனும், செங்கேணி அம்மையப்பன் வீரமிண்டன் என்னும் அத்தி விக்கிரம சோழ சம்புவராயனும், செங்கேணி வீரமிண்டன் அத்திமல்லன் என்னும் குலோத்துங்க சோழச் சம்புவராயனும் காணப்படுகின்றனர்.

மூன்றாம் இராசராசன் காலத்தில் செங்கேணி விராசினி அம்மையப்பன் தனி நின்று வென்றான் தன் வாசி காட்டுவான் அழகிய சோழன் என்னும் எதிரிலி சோழச் சம்புவராயன் என்பானும்

செங்கேணி வீரப் பெருமாள் என்னும் குலோத்துங்க சோழச் சம்புவ ராயனும், வீரசோழன் அத்திமல்லன் என்னும் எதிரிலி சோழ சம்புவ ராயனும், அத்திமல்லன் சம்புகுலப் பெருமாள் என்னும் இராச கம்பீரச் சம்புவராயன் என்பானும் இருந்திருக்கின்றனர் என்பது கல்வெட்டுக்களால் தெரியவருகின்றன.

பிற்காலப் பாண்டிய மன்னர்களான சடாவர்ம சுந்தர பாண்டியன் காலத்தில் சுந்தர சோழச் சம்புவராயன் என்பவனும், சடாவர்ம வீரபாண்டியன் காலத்தில் சோழப்பிள்ளை என்னும் சம்புவராயனும், மாறவர்மன் வீரபாண்டியன் காலத்தில் ஏகாம்பரநாதன் குலசேகர சம்புவராயனும், மாறவர்மன் திரிபுவனச் சக்ரவர்த்தி சுந்தரபாண்டியன் காலத்தில் வீரசந்தன் என்னும் சம்புவராயனும் குறிக்கப்படுகின்றனர். இவன் வீரசம்பரையன் என்றும் அழைக்கப்பட்டிருக்கிறான். இவன் காலத்தில்தான் 'வீரசம்பன் குளிகை' என்னும் காசு வெளியிடப்பட்டிருக்கிறது.

இவை மட்டும் அல்லாமல் தெலுங்குச் சோழ மன்னனான விஜய கண்ட கோபால தேவர் காலத்தில் பிள்ளையார் இராசராச சம்புவ ராயனும், வீரகண்டகோபாலன் காலத்தில் குலோத்துங்க சோழச் சம்புவராயன் என்னும் அழகிய சோழனும் குறிக்கப்படுகின்றனர். மேற்காணும் குறிப்பில் இருந்து பிற்காலச் சோழர்கள் காலத்திலும், பிற்காலப் பாண்டியர் காலத்திலும், சம்புவராயர் என்ற குறுநில மன்னர்கள் வலிமையோடு இருந்தமை புலப்படுகிறது. இக்காலக் கட்டத்தில் இக்குறுநில மன்னர்கள் ஒருவருக்கொருவர் தம் ஆட்சியின் எல்லைப் பகுதியின் பாதுகாப்பு பற்றி உடன்படிக்கை செய்து கொண்டுள்ளார்கள் என்பதையும் சில கல்வெட்டுக்களால் அறிய முடிகிறது.

இக்குறுநில மன்னர்களின் கல்வெட்டுகள் பரவலாகத் தற்போதைய வடார்க்காடு, தென்னார்க்காடு மற்றும் செங்கல்பட்டு மாவட்டப் பகுதிகளில் காணப்படுகின்றன. இவர்கள் சிறு சிறு பகுதியை ஆட்சி செய்து வந்திருக்கலாம். தங்களது பேரரசுக்குப் போர்க்காலங்களில் படையும் மற்ற காலங்களில் வரி வசூலித்து அளித்தும் உதவி வந்திருக்கலாம்.

சோழர்களின் வீழ்ச்சிக்குப் பிறகு பாண்டியர்கள் ஆட்சி புரிந்தனர். அவர்களுள் ஏற்பட்ட பூசல் காரணமாகத் தில்லியை ஆட்சிபுரிந்து வந்த இசுலாமியரின் நுழைவு தமிழகத்தில் ஏற்பட்டது. பாண்டியர்களான சுந்தரபாண்டியனுக்கும் வீரபாண்டியனுக்கும் ஏற்பட்ட போரில் வீரபாண்டியன் உதவிக்கு வந்த இசுலாமியர் படை, பாண்டியர்கள் அனைவரையும் வீழ்த்தித் தாம் ஆட்சி செய்யத் தொடங்கியது.

அப்போது தமிழகத்தின் வடபகுதியில் கேரள மன்னன் இரவிவர்மன் வீரபாண்டியன் என்பான் ஆட்சி செய்து வந்தான். கி.பி 1316-ல் முப்பிடிநாயக்கன் என்பான் இரவிவர்மன் வீரபாண்டியனைத் தோற்கடித்துக் காஞ்சீபுரத்தில் தனது பிரதிநிதியொருவரை அமர்த்தினான். இப்போரில் முப்பிடிநாயக்கனுக்கு உதவியாக வீரபாண்டியனும், சுந்தரபாண்டியனும் அவர்களது குறுநில மன்னனான குலசேகரச் சம்புவராயனும் விளங்கியிருக்க வேண்டும் என ஊகிக்க இடம் ஏற்படுகிறது. இப்போர் செய்யாற்றங்கரையில் நடைபெற்றிருக்கிறது. ஆதலால்தான் குலசேகரச் சம்புவராயன் 'செய்யாற்றில் வென்றான்' என்ற பட்டத்தைப் பெற்றிருக்கிறான்.

### குலசேகரச் சம்புவராயன்

இவன் பாண்டிய மன்னன் வீரபாண்டியனுக்கு அடங்கிய சிற்றரசனாக வாழ்ந்திருக்கிறான். இவனைப் பற்றித் தெரிவிக்கும் கல்வெட்டுக்கள் விரிஞ்சிபுரம், வெடால், திருவத்தூர், உத்திரமேரூர், பள்ளிகொண்டா ஆகிய இடங்களிலிருந்து கிடைத்துள்ளன. பள்ளிகொண்டாக் கல்வெட்டுக்கள் மட்டும் இவனது சுய ஆட்சிக் காலத்தில் எழுதப்பட்டவைகளாகக் காணப்படுகின்றன. இக்கல்வெட்டுக்கள் 'குலசேகரச் சம்புவராயன் ஓலை' என்றே தொடங்குகின்றன. பதினைந்தாவது ஆட்சியாண்டு வரை இக்கல்வெட்டுக்கள் காணப்படுவதால் பதினைந்து ஆண்டுக் காலம் சுய ஆட்சி செய்திருக்கிறான் என்று அறிய முடிகிறது. இவனுக்கு 'அந்தளில் வென்றான்' என்றும் 'செய்யாற்றில் வென்றான்' என்றும் பட்டப் பெயர்கள் இருந்திருக்கக்கூடும் என்பது மேற்காணும் பெயர்களால் கோயில்களில் விழா எடுப்பதற்கு இவன் ஆணையிட்டிருப்பதிலிருந்து தெரியவருகிறது. இம்மன்னன் கி.பி. 1305-லிருந்து 1322 வரை ஆண்டிருக்கலாம் என்று கருதலாம்.

LIBRARY, Acc No... Date...

## சகலலோகச் சக்கரவர்த்தி வென்றுமண் கொண்ட சம்புவராயர்

இம்மன்னனின் பதினாறாம் ஆட்சியாண்டில் எழுதப்பெற்ற மேல்பாடிக் கல்வெட்டில் குலசேகரச் சம்புவராயர் 'நாயனார்' என்று குறிக்கப்படுவதால் குலசேகரச் சம்புவராயனின் மகனாக வென்று மண்கொண்ட சம்புவராயன் இருக்கலாம் என்று ஊகிக்கப்படுகிறது. இவனது ஆட்சிக் காலம் கி.பி. 1322, மே 18-லிருந்து ஜூன் 27-க்குள்ளாகத் தொடங்கப்பெற்றிருத்தல் வேண்டும் என்று கணிக்கப்பட்டுள்ளது.

இம்மன்னனின் இரண்டாம் ஆட்சியாண்டிலிருந்து பதினெட்டாம் ஆட்சியாண்டு வரையிலான கல்வெட்டுக்கள் கிடைத்துள்ளன. ஆதலால் இவன் கி.பி. 1322-லிருந்து 1340 வரை ஆட்சி செய்திருக்கலாம் என்று கொள்ளலாம். வடார்க்காடு, தென்னார்க்காடு, செங்கற்பட்டு மாவட்டங்களிலிருந்து இம்மன்னன் காலத்திய பதினேழு கல்வெட்டுக்கள் கிடைத்துள்ளன. கிடைத்துள்ள அனைத்துக் கல்வெட்டுக்களிலும் இவன் 'வென்று மண் கொண்ட சம்புவராயர்' என்றே அழைக்கப்படுகிறான். ஆதலால் இவன் ஆட்சிப் பீடம் ஏறுமுன்னே இப்பெயரைப் பெற்றிருக்க வேண்டும் என்று தோன்றுகிறது.

இவன் காலத்தில் தமிழகத்தின் தென்பகுதியை ஆட்சி செய்து வந்த இசுலாமியர் தம் ஆட்சிப் பரப்பைத் தமிழகத்தின் வடபகுதியிலும் விரிவாக்கத் தொடங்கியபோது அவரோடு போரிட்டு வென்றதால் அப்பட்டத்தைப் பெற்றிருக்கலாம் என்பது இம்மன்னனின் 14-ஆம் ஆட்சி ஆண்டுக் கல்வெட்டின் மூலம் உணர முடிகிறது. அக்கல்வெட்டில் முன்னாளில் ஏற்பட்ட இசுலாமியப் படையெடுப்பு குறிக்கப்பட்டுள்ளது.

இம்மன்னனின் இயற்பெயர் ஏகாம்பரநாதன் என்று தெரிகிறது. வடார்க்காடு மாவட்டம் குட்டியம் சிவன் கோயிலில் சகலலோகச் சக்ரவர்த்தி பொன்னின் தம்பிரான் இராசநாராயண சம்புவராயனின் கல்வெட்டுப் பொறிக்கப்பட்டுள்ளது. அக்கல்வெட்டில் எழும்போதன் என்பான் இராசநாராயணனின் தந்தை (அய்யாச்சியார்) ஏகாம்பரநாத வென்று மண் கொண்ட சம்புவராயர் பெயரால்

எழுப்பியுள்ள ஆலயத்துக்கு வழிபாட்டுக்கு மன்னன் நான்கு வேலி நிலம் கொடையாக வழங்கியது கூறப்பட்டுள்ளது. இக்கல்வெட்டின் மூலம் வென்று மண் கொண்ட சம்புவராயனுக்கு ஏகாம்பரநாதன் என்ற பெயர்தான் இயற்பெயர் என்பது உறுதியாகிறது.

இம்மன்னனுக்குச் 'சென்ற திசை வென்றான்' என்னுமொரு பட்டமும் வழங்கியிருக்கும் போலத் தெரிகிறது. வடார்க்காடு மாவட்டம் வேப்பூரில் காணப்படும் கல்வெட்டில் திருவடித்திட்டீசு வரர்க்குச் சொந்தமான நிலம் 'சென்ற திசை வென்றான் திருவீதி' யாக மாற்றப்பட்டதாகவும், அதற்கு ஈடாக அத்தெருவில் குடியேறு வோர், மனைவரி கோயிலுக்குச் செலுத்துதல் வேண்டும் என எழுதப் பட்டுள்ளது. இக்கல்வெட்டு இம்மன்னனின் 17-ஆம் ஆட்சியாண்டில் பொறிக்கப்பட்டுள்ளது. ஆதலால் மேலே குறிப்பிட்டுள்ள திருவீதி இம்மன்னனின் பெயராலேயே அமைந்திருக்கக்கூடும் என்று நம்பலாம்.

## முதலாம் இராசநாராயண சம்புவராயன் என்னும் திருமல்லிநாதன்

வென்றுமண்கொண்ட சம்புவராயருக்கு இராசநாராயணன் திருமல்லிநாத சம்புவராயன் என்றும், இராசநாராயணன் பொன்னின் தம்பிரான் என்றும் இரு புதல்வர்கள் இருந்தமை கல்வெட்டுக் களினால் புலனாகின்றது. வடார்க்காடு மாவட்டம் வாலாசா வட்டத்திலுள்ள குட்டியம் என்னும் ஊரிலுள்ள சிவன் கோயிலில் காணப்பெறும் இராசநாராயணனின் 13-ஆம் ஆட்சியாண்டுக் கல் வெட்டு வென்று மண்கொண்ட சம்புவராயனின் சாம்பலைக் கொண்டு சென்று கங்கையாற்றில் கரைத்ததற்கும் கயையில் சிரார்த்தம் செய்ததற்கும் பரிசாக எழும்போதன் கங்கையாடி மாதயன் என்னும் அகம்படி முதலிக்கு குட்டியம் என்னும் இராசநாராயண நல்லூரை இறையிலியாக இராசநாராயணன் வழங்கியமையைக் குறிப்பிடுகிறது. இதிலிருந்து வென்று மண்கொண்ட சம்புவராயனை அடுத்து இராச நாராயணன் ஆட்சிக்கு வந்திருக்க வேண்டும் என்பதும், அவன் வென்றுமண்கொண்ட சம்புவராயனின் மகனாக இருக்கலாம் என்பதும் விளங்கும்.

இதே கோயிலில் காணப்பெறும் கல்வெட்டுக்களில் ஒன்று மேற்காணும் அகம்படி முதலியான் ஆன எழும்போதன் இராச நாராயணன், பொன்னின் தம்பிரானின் தந்தை (அய்யாச்சியார்) ஏகாம்பரநாத வென்றுமண்கொண்ட சம்புவராயன் பெயரால் ஆலயம் எழுப்பியுள்ளதைக் காட்டும். இராசநாராயணன் பொன்னின் தம்பிரானின் மற்றொரு கல்வெட்டு இராசநாராயணன் மல்லிநாதனை 'அண்ணாச்சியார்' என்று குறிப்பிடுகிறது. ஆதலால் இராசநாராயணன் திருமல்லிநாதன் மூத்தவனாகவும், இராசநாராயணன் பொன்னின் தம்பிரான் இளையவனாகவும் காணப்படுகின்றனர். இவர்களுக்கு ஏகாம்பரநாத வென்று மண் கொண்ட சம்புவராயர் தந்தை என்பதும் தெளிவாகிறது.

சகலலோகச் சக்கரவர்த்தி இராசநாராயணன் சம்புவராயன் என்ற பெயரில் 145 கல்வெட்டுக்கள் படியெடுக்கப்பட்டுள்ளன. மேலே கூறப்பட்டுள்ள அண்ணன், தம்பி இருவருக்கும் இராசநாராயணன் என்ற பெயர் காணப்படுவதால் இக்கல்வெட்டுக்களில் எவை அண்ணன் காலத்திலும், எவை தம்பி காலத்திலும் வெளியிடப்பட்டவை என்பதை அறிய இயலவில்லை. சகலலோகச் சக்கரவர்த்தி இராசநாராயணன் சம்புவராயன் என்னும் திருமல்லிநாதன் கி.பி. 1337-லும், சகலலோகச் சக்கரவர்த்தி இராசநாராயணன் என்னும் பொன்னின் தம்பிரான் கி.பி. 1338-லும் ஆட்சிபுரியத் தொடங்கியுள்ளனர் என்று பஞ்சாங்கக் குறிப்புக்களால் தெரியவருவதாக திரு. சேதுராமன் தெரிவித்துள்ளார்.

அண்ணனை முதலாம் இராசநாராயண சம்புவராயன் என்றும், தம்பியை இரண்டாம் இராசநாராயண சம்புவராயன் என்றும் கொள்ளலாம். சகலலோகச் சக்கரவர்த்தி இராசநாராயணனின் கல்வெட்டுக்கள் மூன்றாம் ஆட்சியாண்டு தொடங்கி 23-ஆம் ஆட்சியாண்டு முடிய கிடைத்துள்ளன. காஞ்சிபுரத்துக்கு அருகில் உள்ள உக்கலில் காணப்பெறும் இராசநாராயணன் கல்வெட்டு 26-ஆம் ஆட்சியாண்டில் எழுதப்பட்டிருக்கலாம் என்று கருதப்படுகிறது.

இராசநாராயண சம்புவராயன் காலத்தியக் கல்வெட்டுக்கள் வடக்கே திருப்பதியிலிருந்து தெற்கே விழுப்புரம் வட்டம் திருவாமாத்

தூர் வரையிலும் கிழக்கே சைதாப்பேட்டை வட்டம் முதல் மேற்கே போளூர் வட்டம் வரை வடார்க்காடு, தென்னார்க்காடு, செங்கற்பட்டு மாவட்டங்களில் பரந்து காணப்படுகின்றன. சகலலோகச் சக்கர வர்த்தி வென்று மண்கொண்ட சம்புவராயனால் வெல்லப்பட்ட பகுதி மெல்ல மெல்ல விரிவாக்கப்பெற்று பெரும் நிலப்பரப்பைக் கொண்ட தொண்டைமண்டலம் முழுதும் இராசநாராயண சம்புவராயர்களின் ஆட்சியின் கீழ் வந்தது.

போளூர் வட்டம் சதுப்பேரி என்னும் ஊரிலிருந்து கிடைத்துள்ள இம்மன்னனின் நான்காம் ஆட்சியாண்டுக் கல்வெட்டில் சதுப்பேரி என்னும் 'இராசநாராயணச் சதுர்வேதி மங்கலம்' என்று குறிக்கப் படுகிறது. இவன் காலத்தில் சதுப்பேரி, இராசநாராயணச் சதுர்வேதி மங்கலம் என்ற பெயர் பெற்றிருக்கிறது என்பது இக்கல்வெட்டால் உணரமுடிகிறது. விழுப்புரம் வட்டம் திருவாமாத்தூர் கோயில் இறைவனுக்கு 'இராசநாராயணன் சந்தி' என்னும் வழிபாடு ஏற்படுத்தப்பட்டதாகத் தெரிகிறது.

திருவண்ணாமலை வட்டம் ஆவூர்க் கல்வெட்டின் மூலம் இம்மன்னனின் பட்டத்தரசியின் தாயார் பெயர் 'தீமப்பனார்' என்று புலனாகிறது. ஆந்திர மாநிலம் திருப்பதியில் காணப்பெறும் ஒரு கல்வெட்டு இம்மன்னனைச் 'சம்புகுலச் சக்கரவர்த்தி திருமல்லிநாதன் சம்புவராயப் பெருமாள்' என்று குறிப்பதால் சம்புகுலத்தில் வலிமைவாய்ந்த மன்னனாக இம்மன்னன் விளங்கியிருக்கிறான் என்பது தெரியவருகிறது.

இவன் காலத்துக்கு முன்பாக இப்பகுதியில் வரிச்சுமை அதிகமாக இருந்திருக்கக்கூடும் என்று தெரிகிறது. பல ஊர்களுக்கு வரிவிலக்கு இவன் காலத்தில் அளிக்கப்பட்டிருப்பது இதனைக் காட்டுகிறது. மேலும் சதுர்வேதி மங்கலங்கள் சில புதிதாக உருவாக்கப்பட்டிருக் கின்றன. கோயில்களைப் புதுப்பித்தலும், மண்டபங்கள் எடுப்பித் தலும் இவன் காலத்தில் நிகழ்ந்திருக்கின்றன.

### இரண்டாம் இராசநாராயண சம்புவராயன் என்னும் பொன்னின் தம்பிரான்

இவன் முதலாம் இராசநாராயணனின் தம்பி என்பது குட்டியம் கல்வெட்டால் தெளிவாகிறது. இவன் கி.பி. 1338-முதல் 1362-முடிய அரசாண்டுள்ளான். இவனது கல்வெட்டுக்கள் மூன்றாம் ஆட்சி ஆண்டிலிருந்து 19-ஆம் ஆட்சி ஆண்டு வரை கிடைத்துள்ளதாகக் கருதப்படுகிறது.

இம்மன்னன் பொன்னின் தம்பிரான், பொன்னின் பெருமாள், பொன்னாயன் மற்றும் உதாரகுணராமன் போன்ற பட்டப்பெயர்களைப் பெற்றிருந்ததாகத் தெரிகிறது.

இவனது காலத்தில்தான் குட்டியத்தில் இவனது தந்தையின் பெயரால் ஏகாம்பரநாதீச்வரம் என்னும் ஆலயத்தை எழும்போதன் என்ற அரசு அதிகாரி எடுப்பித்ததாகக் கல்வெட்டு கூறுகிறது.

### மூன்றாம் இராசநாராயண சம்புவராயன் என்னும் திருநீற்றுச்சம்பன்

இம்மன்னன் கி.பி. 1356-இல் அரசாட்சி பொறுப்பேற்றுள்ளான். இவனது நான்காம் ஆட்சியாண்டிலிருந்து 20-ஆம் ஆட்சியாண்டு வரை கல்வெட்டுக்கள் கிடைத்துள்ளன. அதாவது கி.பி. 1375 முடிய ஆண்டுள்ளதாகத் தெரிகிறது.

வடார்க்காடு மாவட்டம், போளூர் வட்டம் வசூரில் காணப் பெறும் கல்வெட்டு சகலலோகச் சக்கரவர்த்தி இராசநாராயணன் திருமல்லிநாதன் திருநீற்றுச்சம்பனின் 16-ஆம் ஆட்சியாண்டில் பொறிக்கப்பட்டுள்ளது. இவன் திருமல்லிநாதனின் மகன் என்பதால் திருமல்லிநாதன் திருநீற்றுச்சம்பன் என்று குறிக்கப்பட்டுள்ளதாகக் கருதப்படுகிறது.

### சம்புவராயர் வீழ்ச்சி

வடார்க்காடு மாவட்டம், வந்தவாசி வட்டம், மடம் என்ற ஊரில் அமைந்துள்ள தடாகபுரீசுவரர் கோயிலின் இரண்டாம் திருச்சுற்றின்

தெற்குப் பக்கக் கோபுரத்தில் வெளிப்பக்கச் சுவரில், இருபக்கங்களிலும் இரு கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. முதற் கல்வெட்டு கவிதை நடையில் உள்ளது. இரண்டாம் கல்வெட்டு விசயநகர மன்னன் குமாரகம்பணன் ஆட்சிக் காலத்தில், சக ஆண்டு 1285-இல் அதாவது கி.பி. 1362-இல் எழுதப்பட்டிருக்கிறது. சோமய தண்ணாயக்கனின் மகன் கண்டரகூளி மாரயநாயக்கன், வென்று மண்கொண்ட சம்புவராயனையும், இராசகம்பீரமலையையும் கையகப்படுத்திய தன் வெற்றியைக் கொண்டாடுமுகத்தான் தடாக புரீச்வரர் ஆலயத்தில் 'கண்டரகூளி மாரயநாயக்கன் திருக்கோபுரம்' எடுத்ததை இக்கல்வெட்டு குறிப்பிடுகிறது.

வென்று மண்கொண்ட சம்புவராயன் கி.பி. 1322-லிருந்து கி.பி. 1339-வரை ஆட்சி செய்துள்ளான். அவ்வாறிருக்கையில் கி.பி. 1362-இல் கண்டரகூளி மாரய்யன் அம்மன்னனை வென்றிருக்க முடியாது. இரண்டாம் இராசநாராயண சம்புவராயன் கல்வெட்டுக்கள் கி.பி. 1362-63 வரை கிடைத்துள்ளன. ஆதலால் இம்மன்னனைத்தான் கண்டரகூளி மாரய்யன் வென்றிருக்க முடியும். இம்மன்னன் தன் தந்தையின் பெயரை முன்னொட்டாகப் பெற்றிருந்ததால் அப்பெயர்க் கல்வெட்டில் காணப்படுகிறது என்று கொள்ளலாம்.

உதவிய நூல்கள்


1 South Indian Inscriptions.

2 Annual Reports on Epigraphy.

3 Thirumalai Tirupati Inscriptions.

4 The Sambuvarayas of the 14th Century—N. Sethuraman.

# சம்புவராயர் மாவட்டத்தில் ஓர் அரசியல் புரட்சி

ச. செங்கல்வராயன், பி.ஏ.
அச்சுப் பிழை திருத்துபவர்.

திருவண்ணாமலையிலிருந்து சுமார் 20 மைல் வடமேற்கில் செங்கமா என்னும் சிற்றூர் உள்ளது. இவ்வூரில் திருஇடபந்துறை நாயனார் (ரிஷபேஸ்வரர்) கோயில் ஒன்று உள்ளது. இக்கோயிலில் கி.பி. 1258-ஆம் ஆண்டு ஆவணி மாதம் ஒரு கல்வெட்டு பொறிக்கப் பட்டுள்ளது.

தமிழகத்தில் கிடைத்துள்ள ஆயிரக்கணக்கான கல்வெட்டுக் களில் மேற்கூறிய கல்வெட்டு தனியிடம் பெறுகிறது. ஏனெனில் இக் கல்வெட்டில் அடங்கியுள்ள செய்தி, அரசியல் தன்மையுடையதாக மட்டுமல்லாமல் அப்போது நடந்த ஓர் அரசியல் புரட்சியைப் பற்றிய செய்தியைத் தாங்கி நிற்பதேயாகும்.

இக்கல்வெட்டில்தான், அரசியல் குறித்த மிகவும் முக்கியமான முடிவுகளை எடுப்பதில், மக்களும் பங்கேற்று இருப்பதை அறிய முடிகிறது. மேலும் மக்களிடையே எத்தனை பிரிவுகள் இருந்தன என்பதையும், இருந்த போதிலும் அவர்கள் எவ்வாறு முக்கியமான பிரச்சினைகளின்போது ஒன்றுசேர்ந்து இயங்கினார்கள் என்பதையும் அறிய முடிகிறது.

தற்போதைய சம்புவராயர் மாவட்டத்தின் பல பகுதிகளை, கி.பி. 13, 14-ஆம் நூற்றாண்டுகளில்; பாண்டிய, சோழப் பேரரசுகள் வலிமை குன்றிய நிலையில், குறுநில மன்னர்கள் ஆட்சி புரிந்தனர். இக்காலகட்டத்தில் திருவண்ணாமலையைப் "பிரதிகங்கர்" என்பாரும் அடுத்துள்ள ஆடையூரைக் "கரிகால சோழ ஆடையூர் நாடாழ்வான்"

என்பாரும் ஆண்டு வந்தனர். ஆடையூரை ஆண்டு வந்த கரிகால சோழ ஆடையூர் நாடாழ்வான் நோய்வாய்ப்பட்டோ அல்லது முதுமையின் காரணமாகவோ தொடர்ந்து அரசாள முடியாத நிலை ஏற்பட்டது. இவனது மைந்தர்கள் மிகவும் சிறுவர்களாக இருந்திருத்தல் கூடும். எனவே இம்மன்னன் தனது தம்பி "நரசிங்கபன்மன்" என்பவனைத் தற்காலிகமாக அரசாள வைக்கிறான்.

இளையவன் நரசிங்கபன்மன், திருவண்ணாமலையின் பிரதி கங்கர் குலத்து மங்கை ஒருத்தியை மணந்துள்ளான். இவர்களுக்கு 1) பெரியுடையான், 2) அரசகள்நாயன், 3) அமட்டாழ்வான் என மூன்று புதல்வர்கள்.

இம்மூவருக்கும், ஆடையூரின் அரசாட்சி தனது பெரிய தந்தை யின் குழந்தைகளைச் சென்றடையாதவாறு, அபகரித்துக் கொள்ள வேண்டும் எனும் உணர்வு தூண்ட, அதற்கான முயற்சியில் ஈடுபடு கிறார்கள். இதன் பொருட்டுத் தமது தந்தையரின் எதிரியாகிய கருப்பக்கட்டி நாயக்கர் என்பவருடன் சேர்ந்து புரட்சி செய் கிறார்கள். ஆனால் இவர்களது புரட்சி நசுக்கப்படுகிறது.

புரட்சியில் ஈடுபட்ட பெருங்குற்றத்தை இவர்கள் செய்த போதிலும், அரசு இவர்களை மன்னித்து ஆணையிடுகிறது. ஆனால் மன்னிப்பை ஏற்கப் புரட்சியாளர் மறுக்கின்றனர். இந்த நிலையில் மேற்கொண்டு செய்ய வேண்டியதை முடிவு செய்ய மன்னர் மக்களை நாடுகின்றார்.

தமது நாட்டிற்கும், மன்னனுக்கும் ஏற்பட்ட மேற்கண்ட நெருக்கடியான நிலைக்கு ஒரு சரியான, நியாயமான தீர்வினை அடைய அந்நாட்டின் எல்லாத் தரப்பு மக்களும், "அந்தணன் தலையாக அரிப்பன் கடையாக" ஆடையூரில், கூடுகிறார்கள்.

அவ்வாறு கூடிய மக்கள் கூட்டத்தில், நடந்த நிகழ்ச்சிகள் விரிவாக எடுத்துரைக்கப்படுகிறது. ஆழமான விவாதங்களுக்குப் பின்னர் கீழ்க்கண்ட முடிவுகள் எடுக்கப்படுகின்றன.

புரட்சியாளர்கள்,

1) இராசத் துரோகிகள் என்றும்;

2) நாட்டுத் துரோகிகள் என்றும்

அறிவிக்கப்படுகிறார்கள். இதன் விளைவாக இம்மூவரோ அவர்தம் வழியினரோ இந்நாட்டிற்குள் நுழையத் தடை விதிக்கப்படுகிறது. மேலும் இவர்களுடன் யாரும் எவ்வகையிலும் தொடர்பு கொள்ளக் கூடாது என்றும் முடிவெடுக்கப்படுகிறது. இவர்களுக்குப் பெண் கொடுப்பதோ, கொள்வதோ கூடாது என்றும் அறிவிக்கப்படுகிறது.

மேற்கண்ட முடிவுகளுடன் கூட, இனி வரும் காலங்களில் இம் மன்னர்களை மணந்து கொள்ளும் பிரதிகங்கர் குலத்துப் பெண்கள் வயிற்றில் பிறக்கும் எவருக்கும், இந்நாட்டில் அரசுரிமை அளிப்ப தில்லை என்றும், பிற அரசியருக்குப் பிறக்கும் பிள்ளைகளுக்கே அரசுரிமை அளிக்கவேண்டும் என்றும் முக்கியமான முடிவுகள் எடுக்கப்பட்டன.

மக்கள் கூட்டத்தால் ஒருமுகமாக எடுக்கப்பட்ட மேற்காணும் முடிவுகளை யாரும் எவ்விதத்திலும் மீறக்கூடாது என்றும், மீறுபவர் களுக்கு என்ன தண்டனை என்பதும் வரையறுக்கப்படுகிறது. இவ்வாறு எடுக்கப்பட்ட முடிவுகளைச் "சூரியனும் சந்திரனும்" உள்ளவரை எல்லோரும் கடைபிடிக்க வேண்டும் என்னும் முடிவுடன், மேற்கண்ட அனைத்து விவரங்களும் எல்லோரும் அறியும் வகையில், கோயிலிலே கல்வெட்டி வைப்பது என்றும் முடிவெடுத்துள்ளனர். இத்தகைய அருமையான செய்திகளை உள்ளடக்கிய சுவையான கல்வெட்டின் வாசகம் கீழே தரப்பட்டுள்ளது.

## கல்வெட்டு

ஸ்வஸ்தி ஸ்ரீ சகாப்தம் ஆயிரத்து ஒரு நூற்று எண்பதின் மேல் செல்லா நின்ற, சிம்ம ஞாயிற்று அபரபக்ஷத்து திருதியையும், ஞாயிற்றுக்கிழமையும் பெற்ற ரேவதி நாள்

ஆடையூர் நாட்டு எலியூற்றுக்கு மேற்கும் நம் (ஆளுகை)க்கு உள்ளுப்பட்ட நாடும், மலையும், அடிவாரமும், தென்கரை நாடு

மூவரை வென்ற நல்லூருக்கு மேற்கு, சிற்றிங்கைக்கு கிழக்கு, உட்பட்ட நாடும், மலையும் உட்பட்ட நாடும், இந்த இரண்டு கரை நாட்டுக்கு உள்ளுப்பட்ட

நாட்டவரும், நாட்டு நாயகஞ் செய்வார்களும், மன்றாடுவார்களும், பிள்ளை முதலிகளும், தனியாட்களும், படை நாயகஞ் செய்வார்களும், தனியாள் முதலிகளும், கூலிச் சேவகரும், கொந்த விச்சாதிரரும், நவிரமலை தென்பற்று நாட்டவரும், நாட்டு முதலிகளும், வடமலை நாட்டவரும், நாட்டு முதலிகளும் உள்ளுப்பட்ட பல சனத்தோமும், அடிவாரத்து மலையாளரும், மலையாள முதலிகளும், முதுநீர் மலையாளரும், மலையரண் முதலிகளும், செட்டிகளும், வாணிகரும், கணக்கரும், கருமப்பேரும், பண்ணாட்டவரும், பண்ணாட்டு முதலிகளும், பொற்கொற்ற கைக்கோளரும், ஆண்டார்களும், சிவபிராமணரும், மன்றாடிகளும், உவச்சரும், தென்கரை நாட்டு வடதலை நாட்டவரும், தென்மலை நாட்டாரும் உட்பட்ட நாட்டவரும், புலவரும், பண்ணூவாரும், நியாயத்தாரும், பண்ணிரண்டு பணிமக்களும், உள்ளிட்ட பெரும் வேடரும், பாணரும், பறையரும், பறை முதலிகளும், செக்கிலியரும், இருளரும், உள்ளுப்பட்ட அனைத்து சாதிகளும் "அந்தணன் தலையாக அரிப்பன் கடையாக" உள்ளுப்பட்ட அனைத்து சாதிகளும் பண்ணின படியாவது ;

எங்கள் நாயனார் அமட்டன் கரிகால சோழ ஆடையூர் நாடாழ்வார் திருவிராச்சியம் பண்ணி எழுந்தருளி இருக்க, இவர் ஏவியருளின படியே, இவர்கள் திருத்தம்பியார், நாயனார் நரசிங்கபன்மர் செய்து எழுந்தருளியிருக்க

நாயனார் நரசிங்கபன்மர் மகன் பெரியுடையானும், இவன் தம்பி அரசகணாயனும், கருப்பக்கட்டி நாயக்கருடனே கூடி, எங்கள் நாயன்மாற்கும், எங்களுக்கும் பகை தேடி கீழற்றுப் போயிருக்க

இவர்கள் செய்த பிழையும் பொறுத்து, இவர்கள் கூச்சந் தீர்த்து, திருவெழுத்துச் சாத்தின திருமுகமும் குடுத்து, செட்டி புனைப்பட்டு அமைத்துவிட்ட இடத்து,

திருமுகமும் மறுத்து எங்கள் நாயன்மாற்கும், எங்களுக்கும் பகை தேடி, வெறுப்பான பேருடனே கூடி, எங்களுக்குப் பகையாகையி னாலும், இவர்கள் பிரதிகங்கர் வழியிலுள்ள பேராகையாலும்,

இப்பெரியுடையானும் அரசகனாயனும் இவர்கள் தம்பி அமட்டாழ்வானும், எங்கள் நாயன்மாற்கு இராசத் துரோகிகளும் நாட்டுத் துரோகிகளுமாய், இவர்கள் மூவரையும் பெண்டிழந்தான் கூட்டத்தில் ஒன்றாகப் புறக்கடித்தோம். பிரதிகங்கர் மக்கள் எங்கள் நாயன்மாற்குப் புகுந்த, நம்பிராட்டியார் வயிற்றில் பிறந்த பிள்ளைகளை அரசுக்குக் கொள்ள கடவதல்லவாகவும்;

அல்லாத பிள்ளைகள் பூர்வர் முறையிலே இராச்சியம் பண்ணக்கடவர்களாகவும்;

இம்மண்ணும், மலையும் உள்ளதனையும், எங்கள் மக்கள்-மக்கள் வழிவழி இப்பெரியுடையானையும், அரசகணாயனையும், இவர்கள் தம்பி அமட்டாழ்வானையும் இவர்கள் மக்களில் வழிவழி ஒருத்தரை யும் இம்மண்ணில் புகுத ஒட்டோம். இவர்களுக்கு இடங்குடுப்பதும் செய்யோம். இடங்குடுப்பாரோடு கூடுவதும் செய்யோம். இவர்கள் மூவரும் இம்மண்ணுக்கு உரியர் என்று சொல்லுதல், சொல்வார்க்கு இடங்குடுக்க செய்யக்கடவோமும் அல்லோம்.

இவர்களுக்குக் கீழ் ஓலை விடுதல், இவர்களைக் காத்தல், இவர் களுடன் பேசுதல் செய்தார் உண்டாகில் இராசத் துரோகிகளுமாக்கி நாயிலும் பன்றியிலும் கடையாக குந்த நூக்கக் கடவாராகவும், இவர்கள் பெண்டுகளை மூக்கும், முலையும் அறுத்துவிடக்கடவோம் ஆகவும், இவர்கள் பக்கல் பெண்டுகள் போனவள் குடியாக இப்படி யாகச் செய்யக் கடவோமாகவும். இவர்கள் பக்கம் போனபேரை பணி மக்களையிட்டு கொன்றுபோடக் கடவோமாகவும்,

இப்படிக்கு நாங்கள் அனைவரும் புனை. ஓலைப்பாடியும், நந்தி மங்கலமும் உள்ளுப்பட்ட இந்த அனைத்து (நாட்டவரோம்) இப்படி நிலமை (பண்ணி) பிராமண மிட்டோம்.

இப்படி அற்று மறவும் செய்திலோமாகில் வல்லவரையன் சத்தியம், "தங்கள் அம்மைக்குத் தானே மினாளன்" அசல் வன்னியர்

குதிரைக்குப் புல்லு பறிக்கிற பறையர்க்கு எங்கள் பெண்டுகளை குடுத்தோமாகில் படுக்க. இந்த ஓலைப் படிக்கு தப்பினார் உண்டாகில் செயங்கொண்ட நாச்சியார் கோயிலில், செவ்வாய் கிழமையில் பட்ட (ஆ)டு பட்டது படக்கடவோமாகவும்.

செயங்கொண்ட நாச்சியார் திரி... தமிட்டு சிங்க நாயற்று, இருபத்தி மூன்றாம் தியதியான பஞ்சமியும், அஸ்வதியும், பெற்ற செவ்வாய்க்கிழமை நாள் ஆடுவெட்டி, பூதமுதைத்து, நிலம் பண்ணி, இப்படிக்கு திருஇடபந்துறை நாயனார் கோயிலிலே கல்லும் வெட்டிக் குடுத்தோம், இவ்வனைவோம்.

இக்கல்வெட்டின படிக்கு தப்பினவன் கங்கை குமரியிடை குராப் பசு குத்தின பாவங்கொள்வான்.

இப்படிக்கு இவ்வனைத்து நாட்டவரோம்.

மேற்காணும் கல்வெட்டு வரிகளிலிருந்து சில சிறந்த கருத்துக்களை நாம் பெறுகிறோம். சுமார் 700 ஆண்டுகளுக்கு முன்னரே, அரசு எடுக்கும் முக்கியமான முடிவுகளில் மக்களும் பங்கேற்று இருக்கிறார்கள் என்பதையும், அரசுக்கும், அரசருக்கும் எதிராக யார் தவறு செய்த போதிலும் பாரபட்சமின்றி தண்டிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதையும்; எல்லாவற்றுக்கும் மேலாக மக்களிடையே எண்ணற்ற பிரிவுகள் இருந்தபோதும் அனைவரும் ஒற்றுமையுடன் கூடி வாழ்ந்தார்கள் என்பதையும் நன்கு உணர முடிகிறது.

———

# CHIEFTAINS OF MALADU

**Dr. K. V. RAMAN,**
( Professor, Department of Ancient History and Archaeology,
University of Madras )

The part played by the feudatory Chieftains forms an interesting subject matter of study by itself, though often in the larger context of the history of a country, this is apt to be neglected or underplayed. In our country many of the feudatory clans were as old as the main royal dynasties and also had equally a long and chequered history. Irrespective of the changes in the fortunes of the imperial authority, the local Chieftains have continued to hold sway over their limited territory, owing only formal allegiance to the overlord who was changing from time to time. A remarkable feature of the inscriptions mentioning the feudatories and their activities is that they faithfully echo the fluctuating fortunes of the imperial powers. They are dated in the regnal years of the overlord, whoever that was at that time. In other words, as far as the local people are concerned, they were directly under the authority of the local Chieftains who ruled sometime on behalf of the Cholas and some other time on behalf of Pandyas, as the case may be. Particularly, in the outlying territories, the impact of the central power must have been thin and it was the local Chieftains who mattered much in the day-to-day affairs of administration. By virtue of their tremendous local influence and power and also a long and almost traditional association with

their respective regions, their friendship and loyalty were very often sought after by the imperial powers. In fact, the success of the central authority depended much on how far they were able to weld together these regional pressure-groups and hold their loyalty. (Great imperial powers like the Cholas, inspite of the excellent central machinary, stumbled on the rocks of the recalcitrant tendencies of the ambitious Chieftains). Apart from the political history of the feudatory powers, their contributions and patronage to the local temples, mathas, poets and the learned etc. as well as their methods of administration, their attitude towards their fellow feudatories as well as the imperial power would be a rewarding study.

I propose to sketch briefly the history of an ancient line of Chieftains who ruled over Maladu, the territory round Tirukkovalur in South Arcot District. Probably, they represent one of the oldest Chieftains - clans of Tamilnadu, whose Association with Maladu territory goes back to the Sangam period and continued to be in vogue till atleast the end of the 13th century. They also possess fairly a long record of loyalty to the Cholas in the Sangam period and later, though in the 13th century when central authority broke down, they were compelled to toe the line of the power-groups among the feudatories. When the Kadavarayas and later, the Pandyas became dominant they had to acknowledge their overlordship.

**The territory of Maladu and early references**

Though the present district of South Arcot came under the ancient territorial division known as the

Aruvanadu, the region round the modern Tirukkovalur Taluk including the Arakandanallur on the banks of the river Pennai. was known by the special name Maladu or Malayaman-nadu, the territory of the Mountain-chief. It continued to be the land of Malayamans for a long time, as several Malayamans figure in the medieval inscriptions. The *Ahananuru* refers to a Malayaman as a feudatory of the Cholas with his headquarters at Koval (Tirukkoilur) on the banks of the Pennai.[1] The *Purananuru* contains the praise of a bard who speaks of the Malayaman Kari as the warrior chief of the mountain Mullur and as the lord of the Pennai and as one who was immortalised by the great poet Kapilar.[2] Mullur Malai is an extensive and fertile plateau in this region. Kapilar mentions that Malayaman Kari gave lands to many brahmin settlers and attracted them to his region *(Ariyar thuvanria-per-ichai-Mullur)*. In one of his verses Kapilar praises Kari and his Kingdom thus : "The Sea can not over-run it. No enemy can assail it, Kari who wears the warrior's anklets thy land is the abode of the brahmins who preserve the sacred fires......". He also praises his munificence and his loyalty to one of the three Kings.[3]

Probably Malayaman nurtured ambitions to become an independent monarch and assumed the diadem. He was hence known as Tiru-mudi-kari.

The *Purananuru* records that on the death of the Chola king Nalankilli, Killi-Valavan succeeded to the

---

1 Aham — 35

2 Puram — 122

3 Puram — 122; V. Kanakasabai. *The Tamil 1800 Years ago* - P. 103

Chola throne. But his accession was opposed by the other princes of the Chola family. As many as nine Princes revolted against Killivalavan. Malayaman of Maladu was on the side of the rebellious Chola princes. But thanks to the timely help given by Cheran Senguttuvan, Killivalavan defeated his opponents and established his authority. The Chola King invaded Maladu and defeated and slew Malayaman. The Chera King seized Malayaman's sons and condemned them to death; but Poet Kovur-Kizhar interceded on their behalf and saved their lives. He pleaded that whatever might be the fault, they belonged to an ancient line noted for its munificence and benefaction, and hence deserved all sympathy.

Kannan, one of the sons of Kari thus saved, showed, on a later occasion, his gratitude to the Chola overlord when the latter was hardpressed by his enemies. The Chola monarch had to flee from his capital and seek refuge in the Mullur mountains in the territory of his vassal Kannan. The later gathered all his forces, successfully drove out the enemies and re-established the Chola authority. The grateful king made Kannan his prime minister and conferred on him the title of *Choliya-Enathi.*

**Medieval Times**

In the days of the Alwars and Nayanmars, the places like Tirukkovalur and Kilaiyur were popular centres. According to the Vaisnava hagiology, the first three

Alwars (Mudal-alwars) sang their hymns in the verandah (Idaikkali) of the temple at Tirukkovalur. The deity is called in inscriptions *Idaikkali-Emberuman* and now called Ulagalanda Perumal or Tiruvikrama. Most of the *alwars* have poured out their hearts on the temple. Similarly, Kilaiyur, the eastern suburb of Tirukkovalur was one of the eight Virattanams and sung by the Tevaram hymners.

One of the Nayanmars, Meypporul Nayanar, was a chieftain of Maladu, ruling from Tirukkovalur. The *Periapuranam* describes him as the *Maladar-koman* ruling over the Chedi Country.[1]

It is interesting to note that during the Sangam period, the territory was known only as Maladu or Malayaman-nadu but in the medieval times, the place came to be associated with the Chedis. In all the medieval inscriptions, the later rulers called themselves as the Chedirayas, Malayamans and Kovalarayas. The Malayamans apparently adopted the title Chediraya during this period, since it was a period when the Chieftains tried to associate themselves with the legendary clans of ancient times and assuming high-sounding titles *e.g.* Yadavarayas aligning themselves with the Yadavas. The Chieftain clans imitated the imperial powers in claiming a remote ancestry and assuming

1 சேதி நன்னாட்டின் நீடு
திருக்கோவலூரின் மன்னி
மாதொரு பாகர் அன்பின்
வழிவரும் மலாடர் கோமான்

ambitious titles. As Prof. K. A. Nilakanta Sastri observes "The title of Chediraya is evidence of the new tradition that was growing by which these Chieftains sought to establish a connection with the Haihayas of Chedi at a time when all ruling Chieftains were busy finding a Puranic pedigree for themselves".[1] One of them is even called Sisupalan, who belonged to the legendary Chedi clan.[2]

Probably, when the Cholas of Vijayalaya line came to prominence in the last quarter of the 9th century A.D. Malayamans, their loyal vassels also assumed importance. We find one of the queens of Sundara Chola was a princess of the Maladu territory.[3] Rajaraja I's inscription mentions a Pandya princess as the daughter of one Vikramasola Maladudaiyar.[4] An inscription of Rajendra II mentions one Narasimhavarman as ruling over Miladu 200.[5]

From the time of Kulothunga I, the inscriptions of the Chedirayas and the Malayaman steadily increase and become very frequent during the time of Kulothunga III and Rajaraja III. In most of them, they nominally acknowledge the overlord but in many others, they do not quote the regnal year of the overlord. This would clearly indicate the growing tendencies for independence.

1 K. A. Nilakanta Sastri, Cholas P. 45.
2 73 of A.R.E. 1906.
3 S.I.I. Vol. II, P. 73.
4 7 of A.R.E. 1905.
5 E.I. Vol. VII, pp 145-146.

Their inscriptions are to be found at places like Tirukkovalur, Kilaiyur, Arakandanallur, Virapandi, Mudiyanur, Tiruvennainallur, Vilandai etc. in South Arcot.

An inscription of Kulothunga I dated in his 48th year (A.D. 1118) records that Chediraja, son of Aharasura remitted certain *padikkaval* taxes. The Chieftain's full name was Malayaman Nanurruvan Malayan *alias* Rajendra Chedirayan of Kilaiyur.[1] Another inscription of his from the same place mentions the Chieftain Vanakovarayan Sutrumallan. Maladu was in Rajendra Chola-Valanadu.[2]

An inscription of Vikramacholan dated A.D. 1133 from Visnu temple at Tirukkovalur records that Vikramachola Chediraya had the local authority to collect or exempt taxes.[3]

An inscription of Kulothunga II dated A.D. 1142 mentions the benefactions of Malayaman Malayan *alias* Kulothungasola-Chedirayan and his son Attimallan *alias* Edirilisola-Vanakovarayan to the shrine of the goddess in the temple of Aragandanallur.[4]

The above two inscriptions would clearly show that the Chieftains called themselves both by the ancient or

---

1 132 and 161 of A.R.E. 1934-35.
2 184 of A.R.E. 1934-35.
3 A.R.E. 1921.
4 135 of A.R.E. 1934-35.

traditional name Malayaman and also the more recently acquired title Chedirayan. Some of them also called themselves a Vanakovarayan and some others in the later inscriptions as Vanniyadeva Malayaman. The records mentioning the activities of these Chieftains begin to show a marked increase during the rule of Rajadhiraja III, Kulothunga III, Rajaraja III, and Rajendra III, during whose period all the feudatories of the Cholas like the Kadavarayas, the Sambuvarayas and the Adiyamans (in the South Arcot and North Arcot region), Yadavarayas in the Chittoor - Tirupathi region, and the Telugu Cholas in Nellore - Kanchi region, strengthened themselves and began to assert their independence. They fought among themselves also for supremacy. That is how we get the inscriptions of Kadavaraya Kopperunjinga in the Maladu region. We also get evidence of incursions by the Sambuvarayas from the North Arcot region. Later when the strong rulers of the second Pandyan Empire overpowered the feudatory lines and imposed their hegemony, all the Chieftains including those of Maladu acknowledged the Pandyan overlordship. This in short was the general political trend of the times *i.e.* challenge the central authority when it was weak and be subordinate allies when it was strong. This pattern was followed by the Maladu Chieftains as well. But compared to feudatories like the Kadavarayas, it must be said to the credit of the Maladu Chieftains that, as far as possible, they kept up their traditional loyalty to the Cholas for a long time.

( *To be continued in the next issue* )

TAMIL NADU STATE DEPARTMENT OF ARCHAEOLOGY
LIBRARY
CC ............
Date ............
MADRAS-28.

இத்துறையின் அண்மைக்கால வெளியீடுகள்...

அருண்மொழி

ஆர்க்காடும் அகழ்வைப்பகமும்

இராசராசன் வரலாற்றுக் காட்சிக் கூடம்

இராமலிங்க விலாசம் - கையேடு

தமிழக வரலாற்றுச் சின்னங்கள்

திருமலை மன்னர் கையேடு

THIRUMALAI NAICK PALACE

அட்டைப் படத்தில் உள்ள கல்வெட்டில்,

"எருகாடுஊரு காவிதிகன் கொறிய பாளிய்"

என்ற சொற்கள் பண்டைத் தமிழ் (தமிழ்-பிராமி) எழுத்துக்களி பொறிக்கப்பட்டுள்ளன. எழுத்தமைதியைக் கொண்டு இ கல்வெட்டு கி.மு. இரண்டாம் நூற்றாண்டைச் சார்ந்தது என குறிப்பிடலாம்.

எருகாட்டூரைச் சார்ந்த காவிதிகன் என்பவன் படுக்க கொற்றித் தந்துள்ளான் என்பது இக்கல்வெட்டின் பொரு எருகாட்டூர் என்ற ஊரின் பெயர் பண்டைத் தமிழ்க் கல்வெட் களில் (பிள்ளையார்பட்டி, திருப்பரங்குன்றம்) காணப்படுகிற பிள்ளையார்பட்டி கல்வெட்டில் முதலில் 'எருகாட்டூரு' என்று படிக்க பட்டது. பின்னர் 'எக்காடூரு' என்று திருத்திப் படிக்கப்பட் திருப்பரங்குன்றம் கல்வெட்டில் 'எருக்காடூர்' என்றே படி பட்டுள்ளது. சங்க காலத்தில் 'எருக்காட்டூர்த் தாயங்கண்ணன என்று ஒரு புலவர் இருந்திருக்கின்றார்.

இப்படுக்கையைச் செய்தவன் 'காவிதிகன்' எனக் குறிக்கப் கிறான். 'காவிதி' என்ற சொல் அரசு அதிகாரிகளில் சிறந்த சே செய்த அதிகாரிக்கு மன்னரால் வழங்கப்பெறும் பட்டப் பெயரா சங்க காலத்தில், சிறந்த சேவை செய்த அதிகாரிக்குக் 'காவ என்றும்; சிறந்த வணிகருக்கு 'எட்டி' என்றும் பட்டங்களை மன் அளித்துள்ளான். இக்கல்வெட்டில் குறிப்பிடப்படும் காவிதி அரசனால் சிறப்புப் பட்டம் பெற்றவனாக இருக்கவேண்டும்.

இம்மலையில் மற்றொரு கல்வெட்டும் கண்டுபிடிக்கப்ப டுள்ளது. அக்கல்வெட்டில்,

...வகரண்டை....

என்று எழுதப்பட்டுள்ளது. கரண்டை என்றால் கற்பாழி அ கற்குகை என்று பொருள்.

**இவ்வரிய கல்வெட்டை இத்துறை மதுரைப் பிரிவு அலுவலர்கள திருவாளர்கள் சு. இராசகோபால், வெ. வேதாசலம், சொ. சாந் லிங்கம் ஆகியோர் கண்டுபிடித்தனர்.**

---

தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறையின் அச்சகத்தில் அச்சிட்டு இத்துறை இயக்குநருக்காகத் திருமதி. மார்க்சியகாந்தி, கல்வெட்டாய்வாளரால் வெளியிடப்பெற்றது.